Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு+||

விலை: ரூபா 8.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஐப்பசி- 16 ஹிஜ்ரி 1428 ரம்ழான் 29 (02.11.2005) புதன்கிழமை இதழ் 33

Dialog GSM டயலொக்

kit

100/=, 400/=, 1000/= விலைகளில் கையடக்கத் தொலைபேசி அடிமைகளையும் மற்றும் சகலவிதமான தொலைபேசி அடிமைகளையும் SIM இணைப்புக்களையும் (Connection) மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும் சகல தபால் அலுவலக 2005 சேவைகள், துரித தபால் சேவைகள் உள்நாடு வெளிநாடுகள் பெறுதிகள் (Parcel) சேவைகளுக்கும்

எங்கேயும் என்னுடன்....

WESTERN UNION பணப்பரிமாற்றம்

உலகின் எப்பாகத்திலிருந்தும் ஒருசில நிமிடங்களில் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும் இன்னும் பல சேவைகளையும் ஒரு கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

Sri Murugan
Tele Communication & Agency
Post Office.
303, K.K.S. Road, Jaffna.

T.P: 021 222 5392,
Fax: 222 3214
E.Mail: srimurugan@eureka.lk

இராணுவம் - பொலிஸாரை

புத்தூர்ச் சம்பவம் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு!

யாழ்ப்பாணம்

புத்தூர் பகுதியில் நடைபெற்ற இராணுவத்தினரின் சூட்டுச்சம்பவம் தொடர்பாக ஏழு நாட்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு, யாழ். மாவட்ட இராணுவத் தளபதிக்கும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கும் யாழ். மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி பணித்துள்ளார்.

புத்தூர் பகுதியில் இராணுவத்தினரால் இளைஞன் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தையும், பொதுமக்கள் காயப்படுத்தப்பட்ட சம்பவத்தையும் கண்டித்தும், மேற்படி பகுதியில் தாம் தற்போது குடியமர முடியாதுள்ளதற்கு ஆட்சேபித்தும் அப் பகுதி மக்கள் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் மகஜர் ஒன்றைக் கையளித் திருந்தனர்.

இதனையடுத்து மேற்படி விடயம் தொடர்பாகவும், நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாகவும் 7 நாட்களுக்குள் (12 ஆம் பக்கம் பார்க்க)

மீனவர் ஒருவர் சுட்டுக் கொலை!

மட்டக்களப்பு

மட்டக்களப்பு - செங்கலடி கறுத்தப் பாலத்திற்கு அருகில், மீனவர் ஒருவர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். கொம்மாந்துறையைச் சேர்ந்த ஐயாத்துரை -கணேசவேல் (வயது 31) என்பவரே படையினரால் கொல்லப்பட்டவராவார்.

நேற்றுமுன்தினம் செங்கலடி கறுத்தப்பால ஆற்றில் மீன்பிடிக்கச் சென்ற இவரை எவ்வித காரணமுமின்றி படையினர் சுட்டுக் கொன்றனர். இவரது சடலம் நேற்று நண்பகல், கறுத்தப் பாலம் ஆற்றினருகே கண்டெடுக்கப்பட்டது.

தலையில் சூட்டுக்காயங்கள் காணப்படுவ துடன், (12 ஆம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதி தேர்தல் புறக்கணிப்பு யாழ். முஸ்லிம்களும் ஆதரவு!

யாழ்ப்பாணம்

தமிழ் பேசும் மக்கள் சமாதானத்தையே விரும்புகின்றனர். ஆனால், பிரதான ஜனாதிபதி வேட்பாளர்கள் இருவரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன, தமிழ் பேசும் மக்கள் தேர்தலை புறந்தள்ளுவதற்கு இவ்வாறான செயலே வலுச்சேர்ப்பதாக யாழ்ப்பாணத்தில் மீளக்குடியமர்ந்த முஸ்லிம் மக்கள் நலன்காக்கும் அமைப்பாளர், மக்கள் பணிமனைச் செயலாளர் மௌலவி ஸாகில் தெரிவித்தார்.

நேற்று மக்கள் பணிமனையில் பத்திரிகையாளர்களைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்-

தென்னிலங்கையில் உள்ள சிலர் தமது அரசியல் லாபத்திற்காக யாழ். குடாநாட்டில் முஸ்லிம் மக்கள் குடியமர தொடர்ந்தும் பிரச்சினைகள் இருப்பதாக கூறுகின்றனர். ஆனால், இந்த விடயம் முற்றிலும் தவறானது.

யாழ்.மாவட்டத்தில் முஸ்லிம் மக்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

புலனாய்வுப்பிரிவு மீதான தாக்குதல்; விரக்தி நிலையில் படை அதிகாரிகள்!

அரசாங்கம் மீதும் குற்றச்சாட்டு

கொழும்பு

இராணுவப் புலனாய்வுத்துறை சிரேஷ்ட அதி காரிகள் அடுத்தடுத்து கொல்லப்படும் சம்பவங்கள் படையினராலும், புலனாய்வுத்துறை அதிகாரிகள் மட்டத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும்-

உயிராபத்துள்ள அதிகாரிகளைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்காததையிட்டு அவர்கள் கடும் விசனமடைந்துள்ளதாகவும் கொழும்புத்தகவல் தெரிவித்தன.

கேணல் றிஸ்லி மீடின் உட்பட புலனாய்வுத் துறையைச் சேர்ந்த 5 முஸ்லிம் அதிகாரிகளுக்கும், 3 சிங்கள அதிகாரிகளுக்கும் மரண அச்சுறுத்தல் இருப்பதாகவும், அவர்கள் பல நேரங்களில் தங்களுக்கு இருக்கும் அச்சுறுத்தல்கள் பற்றி புலனாய்வுத்துறை பணிப்பாளர், இராணுவத்தளபதி உட்பட்ட பாதுகாப்புப் பிரிவின் முக்கியஸ்தர்களுக்கு வாய்மூலமும், எழுத்து மூலமும் தெரிவித்திருந்தனர். எனினும் இதுவரை அது குறித்து போதியளவு அக்கறை காண்பிக்கப்படவில்லை -

இராணுவப் புலனாய்வுத்துறையின் இரு பிரதான அதிகாரிகளான லெப்.கேணல் முத்தலிப் மற்றும் கேணல் மீடின் ஆகியோரின் கொலைக்குப் பின்னால் இவ்விரு அதிகாரிகளினது பாதுகாப்பு குறைபாடுகளே (12 ஆம் பக்கம் பார்க்க)

மீடின் கொலையாளி சம்பூருக்கு தப்பினாரா?

கொழும்பு

இராணுவப் புலனாய்வு அதிகாரி கேணல் மீடின் படுகொலையுடன் நேரடியாக சம்பந்தப்பட்டவர் எனக் கருதப்படும் ஐஸ் மஞ்சு என்பவர் திருகோணமலையில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள சம்பூருக்குத் தப்பிச் சென்றுவிட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் கொலையைச் செய்தவர் இவரே என நம்பத்தகுந்த தகவல்கள் கிடைத்திருப்பதாகத் தெரிவித்த பொலிஸார் -

இவர் அடிக்கடி சம்பூருக்குச் சென்று வந்தவராயினும் கொலைக்குப் பின்னர் இவர் சம்பூருக்கே தப்பிச்சென்று விட்டதாகவும் தெரிவித்தனர்.

வாக்களிப்பு நாளில் பாரிய அளவில் தேர்தல் வன்முறை இடம்பெறலாம்!

ஐரோப்பிய கண்காணிப்புக்குழு கவலை

கொழும்பு

ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப் பின்போது பாரிய வன்முறைகள் நடைபெறக்கூடும் என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஜோன் குஸ்னகன் கவலை தெரிவித்தார்.

ரொய்ட்டர் செய்தித் தாபனத்துக்கு அவர் அளித்த பேட்டியில் -

நவம்பர் 17 ஆம் திகதி வாக்களிப்பின் போது வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் பாரிய வன்முறைகள் நடை பெறக்கூடுமோ என்ற கவலை எழுந்துள்ளது. அரச படைகளுடன் சேர்ந்து இயங்குவதாகக் கூறப்படுகின்ற குழுக்களினால் கிழக்குப் பிரதேசத்தில் (12 ஆம் பக்கம் பார்க்க)

தீபாவளி தின கொண்டாட்டத்தில் பரவலாக விபத்துகள், மோதல்கள்!

யாழ்ப்பாணம்

தீபாவளி தினமான நேற்று குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் விபத்துக்கள், அடிதடி மோதல்கள், வாள்வெட்டுச் சம்பவங்கள் பரவலாக இடம்பெற்றதாகவும் - இந்தச் சம்பவங்கள் காரணமாகக் காயமுற்றவர்கள் பலர் மது போதையில் இருந்ததாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

வடமராட்சியில் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் காயமுற்ற பலர் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதவேளை, சங்கானை தேவசிரிய வீதியில் இருந்து மானிப்பாய்க்கு சைக்கிளில் சென்று கொண்டிருந்த தம்பதியினரை பொன்னாலை பிரதான வீதியால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் மூவரும் பலத்த காயங்களுக்கு உள்ளாகினர். நேற்று மாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சைக்கிளில் பயணம் செய்த கட்டுடை மானிப்பாயைச் சேர்ந்த பரமநாதன் (வயது 58) அவரது மனைவி ரதி (வயது 47) மற்றும் மோட்டார் சைக்கிள் சாரதி பிள்ளையார் கோவிலடி, மூளாயைச் சேர்ந்த அ.பாபு (வயது 30) ஆகியோரும் பலத்த காயங்களுக்கு உள்ளாகினர்.

இந்த மூவரும் சங்கானை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு, அம்புலன்ஸ் மூலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இந்த விபத்தில் (12 ஆம் பக்கம் பார்க்க)

வடமராட்சி - நவிண்டிலில் இளைஞர் சுட்டுக்கொலை!

வடமராட்சி

வடமராட்சி நவிண்டில் பகுதியில் இளைஞர் ஒருவர் நேற்றுப் பிற்பகல் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

உடுப்பிட்டி - விடுதி வீதியில் நவிண்டில் பகுதியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இளைஞ ரையே இனந்தெரியாத நபர்கள் சுட்டுக் கொன்றதாகத் தெரிய வருகிறது.

நேற்றுப் பிற்பகல் 2 மணியள வில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் துன்னாலை - கலிகைப் பகுதியைச் சேர்ந்த க.ரஜனிகாந்த் (வயது 29) என்பவரே உயிரிழந்தவராவார்.

பற்றைக்குள்ளிருந்த மேற்படி இளைஞரின் சடலத்தை நெல்லியடிப் பொலிஸார் மீட்டு, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க.அரிய நாயகத்தின் உத்தரவுக்கமைய பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் இன்று நடைபெறவுள்ள தாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி சி.கதிரவேற்பிள்ளை தெரிவித்தார்.

இதேவேளை, மேற்படி நபர் பல குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் எனவும், அண்மைக்காலமாக தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டிருந்தார் எனவும் கூறப்படுகிறது. (14)



ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021-2223891, 2226297, 077-2349999, 011-2372952/3, 011-2360290/1
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை...

Ministry of Healthcare, Nutrition and Uva Wellassa Development
General Hospital (Teaching) Jaffna.
போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்

Registration of suppliers and Servicers for year 2006

2006ம் ஆண்டுக்கான பொருட்கள் வழங்குநர், சேவைகள் வழங்குநர் ஆகியோரைப் பதிவுசெய்தல்

Applications are invited from Manufacturers, Suppliers, Sole Agents, Registered Co-operative societies, Government Institutions, including statutory Boards, Registered Business, Organizations, individuals, who wish to register themselves with this institution for the supply of items and services listed below for the year 2006.

All applications should be sent under registered cover addressed to the Director, Teaching Hospital, Jaffna with the top left hand corner of the envelope marked "Registration of suppliers and services 2006" To reach undersigned on or before 30th November 2005 at 10. Am

Conditions

A Non Refundable Registration fee of Rs. 100.00 should be paid for each item and separate application to be submitted according to the supply/ service. Money should be paid to this office and the receipt should be affixed to the application. (Cheques and money orders will not be accepted) Applications can be made for one or more items coming below. (A) Supplies, (B) Services and (C) Vehicles by one applicant/ one Institute. But separate applications should be made for each item in the list, Application forms are available in this office.

Suppliers, service providers should be able to give one month credit.

When request for quotation is made registered suppliers, Service Providers should quote the price for required supplies same. Director reserves the right to call quotation from external sours also. Failure to quote and not effecting supplies and services in keeping with the standards will make the name of supplies to be deleted form the list.

யாழ். போதனா வைத்தியசாலையில் 2006ம் ஆண்டில் பொருட்கள் வழங்குநர்களையும், சேவை வழங்குநர்களையும் பதிவு செய்வதற்கு பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள், விற்பனை முகவர்கள், அரச நிறுவனங்கள், அரச சபைகள், பதிவு செய்யப்பட்ட வியாபார தாபனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் என்பனவற்றில்இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை "பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு 30.11.2005 அன்று மு.ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக அனுப்பிவைக்கும்படி கோரப்படுகின்றனர்.

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் குறியீடு (A) பொருட்கள் வழங்குதல் குறியீடு (B) சேவை வழங்குதல் குறியீடு (C) வாகன சுத்திகரிப்பு, திருத்தம் என்பவற்றின் கீழ்வரும் ஒவ்வொரு வகையானவற்றுக்கும் தனித்தனியாக ஒவ்வொன்றுக்கும் 100/- ரூபா வீதம் எமது காரியாலயத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்று, எம்மால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து விண்ணப்பித்தல் வேண்டும்.

பொருட்கள் வழங்குநர்களும் சேவைகள் வழங்குநர்களும் ஒரு மாத கால கடன் அடிப்படையில் பொருட்களையும் சேவைகளையும் வழங்கவேண்டும்.

கூறுவிலை கோரும்போது பதிவு செய்யப்பட்ட விநியோகஸ்தர்களும், சேவை வழங்குநர்களும் தமது கூறுவிலைகளைக் கண்டிப்பாகக் குறிப்பிடவேண்டும். பணிப்பாளர் வெளியாரிடமிருந்தும் கூறுவிலை கோருவதற்கு உரிமை கொண்டிருப்பார் என்பதும் அறிவிக்கப்படுகின்றது.

(A) SUPPLIES

01. Stationery Items with local and imported computer stationery, printed computer stationery, photocopy papers, C.R Books, ball point pens, Pencils, envelops items, Carbon papers, white papers, staplers, correcting fluids, stencils, diskettes magnetic tapes, computer materials, including printer ribbons and papers, diskettes, toner, cartridges, Glue cubes and liquid glue.
02. Furniture (Wooden)
03. Furniture (Steel)
04. Mats/ Brooms and Ekel Brooms
05. Coir Mattress and rubber mixed coir mattress (Rubberized)
06. All Type linen items, mackintosh, and clothing items, Elastic and Nylon cords
07. All Aluminum items and Household equipment
08. Ceramics, Glassware Items
09. Paint, Varnish and floor polish, surgical spirit and Nail items
10. Washing soda, Cleaning Detergents, Vim, Harpic, Saving blades and Matches
11. Building Materials
12. Spare parts for all type of Vehicles.
13. Plumping Items, P.V.C. Pipe & etc.
14. All type of Batteries
15. Leather and Leather products
16. Hardware Items, Pad lock, Galvanized, Bucket and Nails etc
17. Electrical Appliances Air Conditioners, Refrigerators, Ceiling fans & Pedestal Fans, Bulbs etc
18. All type of Rexene and polythene items
19. Drugs and Milk food items
20. Rubber stamps items
21. Computers and related accessories
22. Dressing - Cloths matrial
23. Surgical Consumables
24. Surgical Instruments
25. Surgical Equipment
26. Dental Consumables
27. Laboratory Equipment
28. Carpentry Items (All type of wood, Planks, etc)

(B) SERVICES

01. Repairs of steel furniture
02. Repairs of wooden furniture
03. Repairs of Electrical appliances (Air Conditioners, Refrigerators, & Deep Freezers, Repairs and Services of Typewriters, Calculators, Roneo machines, Computers and printers.)
04. Printing (All Type of forms)
05. Repairs of surgical appliances X-Ray machine and all the hospital, equipment
06. Rewinding of Electrical motors, Fans & etc.
07. All kinds of Mechanical equipment services, Maintenance and repair
08. Gas/ Oxygen equipment services and repair (Gas Burners and Gas cookers)
09. Water pump Sewerage Machine repairs and maintenance
10. Repairs of Water supply and Toilet pipes
11. Disposal of Hospital Carbage
12. Sewing works
13. Supply of official Identity card and rubber stamps
14. Repairs of Building

(C) VEHICLES

01. All Repairs, services, Electrical works and cushions works all types of the Vehicles

Dr.S.Raviraj,
Director,
General Hospital (Teaching) Jaffna.

(C/4789)

மாகாண பிரதிப் பணிப்பாளரின் பணிமனை

கேள்வி அறிவித்தல்

பண்ணையில் மார்புநோய் சிகிச்சை நிலையம் அமைந்துள்ள காணியில் களஞ்சிய அறை அமைத்தல்

மேற்படி வேலைக்கு என்னால் சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளது. ரூபா 100/= கேள்விப் படிவக் கட்டணமாகவும் (மீளளிக்க முடியாதது) ரூபா 1000/= கேள்விப் பிணையாகவும் செலுத்தி (மீளளிக்கக்கூடியது) 10.11.2005 வியாழக் கிழமை பி.ப 3.30 மணிவரை உரிய கேள்விப்படிவங்களை ஆஸ்பத்திரி வீதியிலுள்ள எமது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்திசெய்யப்பட்ட கேள்விகள் 11.11.2005 மு.ப 10.00 மணிக்கு முன் உரிய கேள்விப்பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்
பிரதி மாகாணப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள்.
யாழ்ப்பாணம்.

(சி-4791)

மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பணிமனை ஏலவிற்பனை கழிக்கப்பட்ட மர, இரும்புப் பொருட்கள்

09.11.2005 மு.ப 10.00 மணிக்கு எமது அலுவலக வளவில் மேற்கூறிய பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன. ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் ரூபா 100/= (மீளளிக்கமுடியாதது) பதிவுக்கட்டணமாகச் செலுத்தி 08.11.2005 பி.ப 3.30 மணிக்கு முன் தம்மைப் பதிவுசெய்து கொள்ளவேண்டும்.

அலுவலக நேரங்களில் பொருட்களைப் பார்வையிடலாம்.

வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்
பிரதி மாகாணப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள்.
யாழ்ப்பாணம்.

(சி-4791)

பிரதேச செயலகம் - தென்மராட்சி

கேள்வி அறிவித்தல்

கீழ் குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்வி 09.11.2005 ஆம் திகதி காலை 10.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் (09.11.2005) 2.00 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலையின் பொருட்டு நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவகத்தில் (இக்ராட்) பதிவு பெற்ற ஒப்பந்தகாரர்கள் மாத்திரமே கேள்விப் பத்திரம் கோருவதற்கு தகைமையுடையவராவர். கேள்விப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விகள் இந்தச் செயலகத்தால் வழங்கப்பட்ட படிவத்தில் இணைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்டு "பிரதேச செயலர், பிரதேச செயலகம், தென்மராட்சி, சாவகச்சேரி" என்ற முகவரிக்கு எதிர்வரும் 09.11.2005 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

வேலையின் விபரம்	மீளளிக்கப்படும் கேள்விக் கட்டணம்	மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம்
தும்புக் கைத்தொழிலுக்கான பொதுச் சேவைகள் மண்டபம் அமைத்தல், அல்லாரை.	ரூபா 24 500.00	ரூபா 500.00

மேற்குறித்த கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப் படிவுப் பணத்தையும் செலுத்தி, 07.11.2005 ஆம் திகதி பிற்பகல் 1.00 மணிவரை வழங்கப்படும்படி வங்களில் மட்டுமே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இது சம்பந்தமான மேலதிக விபரங்களை பிரதேச செயலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

எஸ்.ஸ்ரீநிவாசன்
தலைவர்,
தினைக்கள கேள்விச் சபை,
பிரதேச செயலகம், தென்மராட்சி.

(சி-4790)

படையினரை முழந்தாளிடவைத்த ஐ.தே.க. இப்போது முதலைக் கண்ணீர் வடிக்கிறது!

பிக்குகள் முன்னணி கண்டனம்

கொழும்பு—

படையினரைப் பலவீனப் படுத்தி, அவர்களை விடுதலைப் புலிகளின் முன் முழந்தாளிட வைத்த ஐ.தே.கட்சி - தற்போது அவர்களின் பாதுகாவலர்களாக தாம் இருப்போமென முதலைக் கண்ணீர் வடிக்கின்றதென தேசிய பிக்குகள் முன்னணி தெரிவித்துள்ளது.

இது குறித்து தேசிய பிக்குகள் முன்னணியின் செயலாளர் வண. கலுவல்கல சந்தலோக தேரர் வெளியிட்ட அறிக்கையில் -

கடந்த 25 ஆம் திகதி இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஐ.தே.கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சாகல ரட்ணாயக்க இருவரும் - படையினரில் 43 பிரிகேட்டுகள் இருந்தபோதிலும் அவை ஒன்றும் தரமானதல்ல எனவும், அவை பழுதடைந்த 43 வாகனங்களை வைத்துப் பராமரிப்பதற்குச் சமன் எனவும் தெரிவித்திருந்தனர்.

இவர்களின் இந்த அறிவிப்புக்குப் பின்னால் விடுதலைப் புலிகளே உள்ளனர். 2002 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைமூலம் படையினர் புலிகளின் காலடியில் விழவைக்கப்பட்டதுடன், இந்த நாட்டில் இரண்டு படைகள் உள்ளதென்பதும் பிரித்துக்காட்டப் பட்டுள்ளது.

மில்லேனியம் சிற்றியிலுள்ள ஆழ ஊடுருவித் தாக்கும் படையணி அலுவலகத்தைக் காட்டிக் கொடுத்ததன்மூலம் விடுதலைப் புலிகள் 68 புலனாய்வு அதிகாரிகள் தகவல் வழங்குவோர் மற்றும் படையினர் என பலரைக் கொன்றுள்ளனர்.

அத்துடன் போர்நிறுத்த உடன்படிக்கையை விடுதலைப் புலிகள் 6000 தடவை மீறியுள்ளனர்.

ஆனால், போர்நிறுத்த உடன் படிக்கையின்படி படையினர் பொறுமையாக இருக்கப் பணிக்கப்பட்டனர். அரச சார்பற்ற நிறுவனங்கள்மூலம் சமாதான நடவடிக்கை என்ற பெயரில் இராணுவத்தை மூளைச் சலவை செய்துவிட்டனர்.

நாடு சுதந்திரமடைந்து 57 வருடங்களில் - 37 வருடங்கள் ஐக்கிய தேசியக் கட்சியே இந்த நாட்டை ஆண்டது. எனவே, படையினர் தரமாக இல்லையென்றால் அதற்கானபொறுப்பை ஐக்கிய தேசியக் கட்சியே ஏற்க வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்கவின் மக்களுக்கான நிகழ்ச்சி நிரலில் படையினரின் பிரிகேட்டை 6 ஆகக் குறைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது படையினரை புலிகளுடன் இணைந்து, பலவீனமாக்கி அவர்கள் தமது இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை தமது இராணுவத்தின்மூலம் பெறவைப்பதற்கான முயற்சியாகும்.

எனவே, இந்த நாட்டை விடுதலைப் புலிகளிடம் காட்டிக் கொடுத்து, அவர்களுக்கு வடக்கு-கிழக்கைத் தாரைவார்க்கவுள்ள ஐ.தே.கட்சிக்கு - எதிர்வரும் 17 ஆம் திகதி மக்கள் நல்ல பாடத்தைப் படிப்பிக்கவேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குர்திஷ் அமைப்பிடமிருந்து ஏவுகணை கொள்வனவாம்!

கொழும்பு—

லண்டனிலுள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகம், ஈராக்கிலுள்ள குர்திஷ், பி.கே.கே எனும் அமைப்புகளிடமிருந்து விமானங்களை அழிக்கும் ஸ்ரிங்கர் ரக ஏவுகணைகளைப் பெற்றுள்ளதாக லண்டன் ரைம்ஸ் பத்திரிகையின் ஜேம்ஸ் கிளார்க் எனும் பாதுகாப்புத்துறை ஆய்வாளர் எழுதியிருப்பதாக அந்தப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பல்வேறு போராளி அமைப்புகளுடன் தொடர்புகளை வைத்திருப்பதற்கும், அவற்றிடமிருந்து ஆயுதங்கள் மற்றும் தொழில் நுட்ப உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் லண்டனிலுள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது. (தே)

ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்புக்குழு தேர்தல் ஆணையாளருடன் சந்திப்பு!

கொழும்பு—

தேர்தல் ஆணையாளருடன் ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்புக் குழுவினர் நேற்றுமுன்தினம் ஆலோசனை நடத்தினர்.

தேர்தல் தினைக்களத்தில் ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்புக் குழுவின் தலைவர் குஸ்னாகன், ஐரோப்பிய ஒன்றியத்துக்கான தூதுவர் ஜூலியன் வில்சன், தேர்தல் ஆய்வாளர் இடோயா அரன்செட்டா ஆகியோர் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவை நேற்று முன்தினம்காலை 11.30 மணியளவில் சந்தித்துப் பேசினர்.

வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் தேர்தல் ஏற்பாடுகள் குறித்து இந்தச் சந்திப்பில் விவாதிக்கப்பட்டதாக ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்புக் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பான செய்திக் குறிப்பில் மேலும் -

இச் சந்திப்பின்போது ஆக்கபூர்வமான பல விடயங்கள் விவாதிக்கப்பட்டன. வடக்கு - கிழக்கு தேர்தல் நிலைமைகள் குறித்து தயானந்த திஸநாயக்க தமது கவலைகளை வெளியிட்டார். எமது கண்காணிப்புப் பணிகளில் தேர்தல் தினைக்களம் தலையிடாது என்றும், தேர்தல் ஆணையகத்தின் கவலைகளை கவனத்திலெடுக்குமாறும், தயானந்த திஸநாயக்க எம்மைக் கேட்டுக்கொண்டார்.

வடக்கு- கிழக்கில் அமைக்கப்பட்டிருக்கும் கொத்தணி வாக்குச்சாவடிகள் தொடர்பான விவரங்களை நாங்கள் கேட்டறிந்தோம். தேர்தல் வன்முறைகள் நடைபெறும் பகுதிகளில் மறு வாக்குப் பதிவு நடத்தப்படுவது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

தேர்தல் வன்முறைகள் நடைபெற்றால், 18 ஆம் திகதி மறு



வாக்குப் பதிவையும், 19 ஆம் திகதி வாக்கு எண்ணிக்கைப் பணியையும் நடத்த திட்டமிட்டுள்ளதாக தயானந்த திஸநாயக்க கூறினார்.

தேர்தல் தினைக்களம் தமக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க உறுதியளித்துள்ளது என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடற்படை தளபதி சிபார்சை ஜனாதிபதி சந்திரிகா நிராகரிப்பு!

கொழும்பு—

கடற்படையின் தலைமையக அதிகாரியாக றியர் அட்மிரல் ரட்ணகீர்த்தியை நியமிக்க ஜனாதிபதி இணங்கவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவரைவிட சிரேஷ்ட நிலையில் நால்வர் இருக்கும்போது ரட்ணகீர்த்தியை கடற்படை தளபதி பதவிசந்த கரன்னகொட பரிந்துரை செய்திருந்தார்.

இதனையடுத்தே ஜனாதிபதி இந்தப் பரிந்துரையை ஏற்க வில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. றியர் அட்மிரல்களான சரத் வீரசேகர, நந்தன தனுவேவத்த, தர்மப்பிரிய மற்றும் வசந்த தென்னக்கோன் ஆகியோரே சிரேஷ்ட கடற்படை அதிகாரிகளாவர்.

கடற்படையின் தலைமையக அதிகாரி மோகன் விஜயவிக்கிரம பதவியில் இருந்து ஓய்வு பெற்றதையடுத்தே அந்தப் பதவிக்கான வெற்றிடம் நிரப்பப் படவேண்டியுள்ளது.

போர்நிறுத்த உடன்பாடு ஏற்பட்டதாலேயே படையினர் உயிரிழப்பு தவிர்க்கப்பட்டது!

பிபிலையில் ஜனாதிபதி சந்திரிகா

கொழும்பு—

குறைபாடுகள் இருந்த போதிலும் போர்நிறுத்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டதாலேயே படையினரின் உயிரிழப்புக்கள் தடுக்கப்பட்டதாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

பிபிலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் -

யுத்த காலத்தில் நாட்டை விட்டு வெளியேறிய முதலீட்டாளர்கள் - போர்நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் மீளவும் திரும்பியுள்ளனர்.

1983 ஆம் ஆண்டு அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவித்து, தீயிட்டு எரித்ததுடன் முஸ்லிம்களையும்துன்பப்படுத்தி, யுத்தத்தை ஏற்படுத்தினார்கள்.

கடந்த மூன்றரை வருடங்களாகக் குறைபாடுகளுடன் என்றாலும் போர்நிறுத்தம் உள்ளதால் எமது படையினர் உயிருடன் உள்ளனர். எமது அதிகாரிகளும் உள்ளனர். இதுவரை யுத்தமொன்று இடம் பெறவில்லை. யுத்தத்தால் அனுபவித்ததுயரங்கள் தெரியும்.

கடந்த மூன்றரை வருடங்களாக பல்வேறு உதவிகள் எமக்குக் கிடைத்துள்ளன. யுத்தம் இல்லாததனால் சீமெந்துப்பெட்டிகள் தற்போது கிராமப் பகுதிகளுக்கு வருவதில்லை. எல்லா இடங்களிலும் குண்டுவெடிப்பதில்லை.

மிகவும் சிரமப்பட்டு இந்த நாட்டிற்கு முதலீட்டாளர்களை வரவழைத்த போதிலும், கொழும்பில் குண்டொன்று வெடித்தவுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளையும் புறக்கணித்து விட்டு அவர்கள் சென்றுவிடுகின்றனர். ஜே.வி.பியின் தலைவர் ரோகண விஜேவீர 1982 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டபோது - யாழ்ப்பாணத்துக்குச் சென்று தனியானதொரு இராஜ்ஜியத்தை வழங்குவேனெனத் தெரிவித்திருந்தார்.

தற்போது அவருடைய ஜே.வி.பி. - சுனாமியால் பாதிக்கப்பட்ட கரையோர பிரதேசங்களில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு, அரசாங்கமும், விடுதலைப் புலிகளும், முஸ்லிம் பிரதிநிதிகளும் இணைந்து சுனாமி நிவாரண சபையை அமைக்க முற்பட்டபோது - உடனே அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, வீரவசனங்களைப் பேசி அரசாங்கத்தைக் கவிழ்க்க முயற்சித்தனர். எனினும் அரசாங்கம் கவிழவில்லை.

சாதாரணமாக விஜேவீரவைத் தவிர வேறெந்த சிங்களத் தலைவர்களும் தனியான ஒரு அரசைத் தருவதாக கூறவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

றிஸ்வி மீடின் படுகொலை தொடர்பாக பாதாள உலக குழுத் தலைவர் கைது!

கொழும்பு—

இராணுவ புலனாய்வுத் துறையின் உயர் அதிகாரி றிஸ்வி மீடினைப் படுகொலை செய்தது தொடர்பாக பாதாள உலகக் குழுவின் முக்கிய புள்ளியான சமில றொசான் என்ற சம்மி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த ஜஸ் மஞ்சு என்பவர் மூலம் மீடினைக் கொலைசெய்ய அவரது இல்லத்திலிருந்து வெளியே அழைத்தது சம்மிதான் என்று பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கைதுச் சம்பவம் தொடர்பாக இராணுவப் பேச்சாளர் என்.விதாரனகே கருத்துத் தெரிவிக்கையில் -

மிடின் கொலையில் சம்மி அவரது சகோதரர் உள்ளிட்ட 5 சந்தேக நபர்கள் கைதுசெய்யப் பட்டுள்ளனர். கொலையாளியான ஜஸ் மஞ்சுவை கைது செய்ய திருகோணமலைக்கு சிறப்புக் குழுவொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. திருமலை பிரதேச அரசியல் பிரமுகர் ஒருவரின் பாதுகாப்பில் ஜஸ் மஞ்சு அடைக்கலமாகியுள்ளார் என வும் தெரிவிக்கப்படுகிறது.

ஹெல உறுமய எம்.பிக்களுக்கு தம்மாலோக தேரர் எச்சரிக்கை

கொழும்பு—

ஜாதிக ஹெல உறுமயவின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினரான உடுவே தம்மாலோக தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

உடுவே தம்மாலோக தேரர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிக்க முன்வந்தமையையடுத்து, அவர்மீது அந்தக் கட்சியின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அத்துரலியே ரத்தின தேரர் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் தம்மீது குற்றம்சுமத்துகின்ற பிக்குகளான நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுக்களைத் தாம் வெளியிட்டால், அவர்கள் நிச்சயமாகச் சிறைசெல்ல வேண்டியிருக்கும் என உடுவே தம்மாலோக தேரர் எச்சரித்துள்ளார்.

வடக்கு - கிழக்குப் பகுதிவாழ் மக்களின் வாக்குரிமையை பாதுகாக்கவேண்டும்!

உயர்நீதிமன்றில் இன்னொரு மனுத்தாக்கல்

கொழும்பு—

தமிழர் தாயகமான வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் வாழும் மக்களும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க அனுமதிக்க வேண்டும் என்று - தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய சோசலிச கட்சியின் வேட்பாளர் சிறிதுங்க ஜயசூரிய நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

உயர்நீதிமன்றில் தனது சட்டத்தரணி கௌரிசங்கர் தவராசா மூலம் அவர் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறப்பட்டுள்ள தாவது -

தென்னிலங்கை மற்றும் வடக்கு - கிழக்கு பிரதேசத்தில் தீவிரவாதக் குழுக்களின் வன்முறைகள் குறித்து எமது கட்சி கவலைகொள்கிறது. ஆனால், எந்தவித தலையிடுகளும் இன்றி நீதியானதும், நியாயமானதுமான தேர்தலை தேர்தல் ஆணையாளர் நடத்துவார் என நம்புகிறோம்.

ஜனநாயகத்தில் தேர்தல் நடைமுறைகள் என்பது பிரிக்கமுடியாத ஒரு அங்கம். இந்த நாடு முழுமைக்கும், இந்த நாட்டின் அரசியல் யாப்பை ஏற்றுள்ள மக்கள் அனைவருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை உண்டு.

வடக்கு - கிழக்கு பிரதேசத்தில் இனப்பிரச்சினை இருந்த போதும் அரச பாடசாலைகள், வைத்தியசாலைகள், வங்கிகள் ஆகியவை இயங்கிவருகின்றன. தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதியிலும் இவை இயங்கிவருகின்றன. இனப்பிரச்சினை இருந்தபோதும்கூட இந்தப் பிரதேச மக்கள் இதுவரையிலான தேர்தல்களில் தங்களது வாக்குரிமையைச் செலுத்தியே வந்தனர்.

விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பிரதேசத்தில் உள்ள மக்களின் வாக்களிக்கும் உரிமையை நாம் தடுப்போமேயானால், அது பாரிய எதிர்விளைவுகளை உருவாக்கும் என்றும் அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரட்டைச்சதம் அடிப்பது பற்றி டோனி சிந்திக்கவில்லையாம்!

ஜெய்ப்பூர்

இலங்கை அணிக்கு எதிரான ஆட்டத்தில் 175 ஓட்டங்களுக்குமேல் குவித்த நிலையிலும் இரட்டைச் சதம் அடிப்பது குறித்து தான் சிந்திக்கவில்லை யென இந்திய அணியின் விக்கெட் காப்பாளர் டோனி தெரிவித்தார்.

எனது சிந்தனை எல்லாம் இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருக்கவேண்டும். அணி வெற்றிபெறவேண்டும் என்பதில் மட்டுமே இருந்தது. அதில் வெற்றி பெற்றது குறித்து மிகவும் மகிழ்கிறேன்.

இந்த விளாசலின் மூலம் டெஸ்ட் அணியில் இடம் கிடைக்குமென நம்புகிறேன். டெஸ்ட் அணியில் இருப்பதை அனைவரும் விரும்புவர். நானும் அதற்குவிதிவிலக்கல்ல என்றார் டோனி.

இதேவேளை, டோனி போன்ற வீரர்கள் புகுந்து விளையாடும்போது என்ன செய்யமுடியும்? ஓமாற்றத்தைத் தாங்கிக்கொள்ளத் தான் வேண்டும். என்றாலும் துடுப்பாட்டத்தில் நாங்கள் முன்னேற்றம் கண்டுள்ளோம் என்று இலங்கை அணியின் பயிற்சியாளர் ரொம் மூடி கூறினார்.

இலங்கை அணியின் பந்துவீச்சை டோனி நாலாபுறமும் விளாசித் தள்ளி ஓட்டங்களைக் குவித்தவிதம் பார்க்க மலைப்பாக இருந்தது. அவர் துடுப்பாட்டம் செய்ததைப் பார்க்கப் பெருமையாக இருந்ததென இந்திய அணித் தலைவர் ராவிட் தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிரான 3ஆவது போட்டியில் வெற்றிபெற்றதும் இந்திய அணியின் கப்டன் ராவிட் கூறியதாவது –

டோனியின் ஆட்டம் மிகவும் அருமையாக இருந்தது. வெற்றி இலக்கை எட்டும்வரை நிலைத்து நின்று ஆடியது மிகவும் சிறப்புக் குரியது. தனது திறமையை நம்பி ஆட வேண்டும் என்று மட்டும்தான் அவருக்கு ஆலோசனை சொன்னேன். அவர் திறமையுடனும், சமயோசிதமாகவும், பயமின்றியும் விளையாடினார். கடைசி 20 ஓவர்கள் எங்கள் பந்துவீச்சு சரியாக இருக்கவில்லை. இவ்வாறு ராவிட் கூறினார்.

தோல்விகுறித்து இலங்கை அணியின் கப்டன் அத்த பத்து கூறுகையில் – டோனியின் சிறப்பான ஆட்டம் போட்டியை எங்கள் கட்டுப்பாட்டில் இருந்து எடுத்துச் சென்று விட்டது. அவருக்கு வாழ்த்துக்கள் என்றார்.

மேற்கிந்திய வேகப்பந்து வீச்சாளர்கள் அவுஸ்ரேலியாவுக்கு அச்சமூட்டுவராம்

பயிற்சியாளர் பெனட் கிங் கூறுகிறார்

பிரிஸ்பேன்

மேற்கிந்தியத்தீவுகள் வேகப்பந்து வீச்சாளர்கள் அவுஸ்ரேலிய துடுப்பாட்ட வீரர்களுக்கு அச்சம் தருவார்கள் என பயிற்சியாளர் பெனட்கிங் தெரிவித்தார்.

மேற்கிந்தியத்தீவுகள் அணி தற்போது அவுஸ்ரேலியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த அணிகளுக்கு இடையே முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் நாளை பிரிஸ்பேனில் தொடங்கவுள்ளது.

மேற்கிந்தியத்தீவுகள் அணியின் முன்னணி வீரர்களான லாறா, சர்வான், கெய்ல் ஆகியோர் இந்தப் பயணத்தில் இடம்பெற்றுள்ளதால் மகிழ்ச்சியுடன் காணப்படுகிறார் பயிற்சியாளர் பெனட் கிங்.

இவர் அவுஸ்ரேலிய கிரிக்கெட் அக்கடமியின் தலைமை பயிற்சியாளராக பணி புரிந்தவர்.

பிரிஸ்பேனில் வலைப்பயிற்சிக்கு இடையில் பெனட் கிங் அளித்த பேட்டியில்- மேற்கிந்தியத்தீவுகள் அணியில் மீண்டும் தலைசிறந்த வேகப்பந்து வீச்சாளர்கள் வலம் வரத் தொடங்கி விட்டனர். இவர்கள் சமீபகாலமாக துடுப்பாடத் தடுமாறிவரும் அவுஸ்ரேலிய வீரர்களுக்கு எதிராக ஆதிக்கம் செலுத்துவார்கள். ஜோ்மைன், லோசன், பெஸ்ட் ஆகியோரின் பந்து வீச்சு பாரட்டும்படியாக உள்ளது.

இலங்கைப் பயணத்தில் கூட எங்கள் அணி நன்றாகத்தான் விளையாடியது.

முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் பங்கேற்காததால் இந்தத் தொடரில் எங்களால் சிறப்பாகச் செயற்பட முடியாமல் போய்விட்டது. இந்தக் குறை அவுஸ்ரேலிய பயணத்தில் நீங்கும் என எதிர்பார்க்கிறேன். துடுப்பாட்ட வீரர்கள் நிலைதான் கவலைப்பட வைக்கிறது. திறமையை வீரர்கள் நிரூபித்தால் இரு துறைகளிலும் அவுஸ்ரேலியாவில் அணிக்கு நல்ல சவாலைத் தரமுடியும் என கிங் மேலும் தெரிவித்தார்.

போட்டி மைதானங்கள் தெரிவுக்கு இங்கிலாந்து பத்திரிகை கண்டனம்

லண்டன்

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையை இங்கிலாந்து பத்திரிகையான தி ரைம்ஸ் கடுமையாக விமர்சித்துள்ளது.

இந்தியாவில் இங்கிலாந்து அணியுடனான டெஸ்ட் தொடர் நடைபெறவுள்ளது. இதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ள விளையாட்டு அரங்குகள் குறித்து இங்கிலாந்து ஊடகங்கள் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளன.

இங்கிலாந்துடனான முதல் டெஸ்ட் போட்டியை அகமதாபாத்திலும், இரண்டாவது டெஸ்ட் போட்டியை நாக்பூரிலும் நடத்துவதென இந்திய கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது. இதுசரியல்ல. இந்த இடங்கள் அவ்வளவு முக்கியத்துவம் இல்லாதவை.

வழக்கம்போல் கொல்கத்தா, டெல்கி, பெங்களூர் மற்றும் சென்னையில் இந்த டெஸ்ட் போட்டிகளை நடத்துவதுதான் சரியாக இருந்திருக்கும். இந்த இடங்களில் போட்டிகள் நடைபெற்றால் நல்ல கூட்டமும் வரவேற்பும் இருக்கும். இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர்கள் தங்குவதற்கு நல்ல வசதியுள்ள ஹோட்டல்களும் – கொல்கத்தா, டெல்கி, பெங்களூர் மற்றும் சென்னையில்தான் உள்ளன.

இந்த நிலையில் அகமதாபாத், நாக்பூரில் போட்டிகளை நடத்த முடிவு செய்திருப்பது நியாயமா? இங்கிலாந்து கிரிக்கெட்டை திட்டமிட்டு அவமானப்படுத்துவதாக இந்தச் செயல் உள்ளது.

இந்திய சுழற்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக அரங்குகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

மேலும் இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் பலவீனத்தையே இந்தச் செயல் எடுத்துக் காட்டுகிறதென லண்டனில் இருந்து வெளியாகும் டைம்ஸ் பத்திரிகையில் இவ்வாறு செய்தி வெளியாகியுள்ளது.

மேற்கிந்தியாவுடனான டெஸ்ட்போட்டி; ஜஸ்ரின் லாங்கர் விளையாடமாட்டார்?

பிரிஸ்பேன்

காயம் காரணமாக மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதல் டெஸ்டில் அவுஸ்ரேலிய வீரர் ஜஸ்ரின் லாங்கர் பங்கேற்கமாட்டாரெனத் தெரிகிறது.

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் தொடக்க ஆட்டக்காரரான லாங்கர் மேற்கு அவுஸ்ரேலிய அணிக்காக உள்ளூர் போட்டியில் விளையாடியபோது, விக்டோறியா அணி வீரர் ஜெராட் டென்சன் வீசிய பந்து கீழ் முதுகுப் பகுதியில் பட்டது. இதனால் காயமடைந்த லாங்கருக்கு உடனடியாக ஸ்கான் சோதனை செய்யப்பட்டது. மருத்துவ அறிக்கையில் இவருக்கு லேசான எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இவரது காயம் பற்றி அவுஸ்ரேலிய அணியின் மருத்துவ ஆலோசகர் டிரபர் ஜேம்ஸ் கூறுகையில்- லாங்கரின் காயம் தொடர்ந்து பரிசோதிக்கப்பட்டு வருகிறது. தற்போது லேசான வலி உள்ளது. நாளை மேற்கிந்திய அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டி பிரிஸ்பேனில் தொடங்கவுள்ளது. இந்தப் போட்டிக்கு இவர் தயாராவது கடைசி நிமிட சோதனையில் தேறுவதைப் பொறுத்தே அமையும் என்கிறார்.

காயம் பற்றி பெரிய அளவில் கவலைப்படாமல் பிரிஸ்பேன் வந்து வீரர்களுடன் கலந்துவிட்டார் லாங்கர். உடல்தகுதி சோதனையில் இவர் தேர்ச்சியடையாத பட்சத்தில், மைக்கல் ஹசே முதல் டெஸ்டில் தொடக்க வீரராக களமிறங்குவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

பெல்ஜியத்தில் நடந்த பெண்கள் ரெனிஸ் போட்டியில் கிம் கிளைஸ்டர்ஸ் சம்பியன் பட்டத்தை வென்றார்.

காஸ்டேபிரான்ஸ்ஸ்ராஸ் பெண்கள் ரெனிஸ் போட்டி பெல்ஜியத்தில் நடந்தது. இதன் இறுதியாட்டத்தில் பெல்ஜிய வீராங்கனை கிம் கிளைஸ்டர்ஸ், பிரான்செஸ்கோவை எதிர்த்து ஆடினார். தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்தி ஆடிய கிம் கிளைஸ்டர்ஸ் இதில் 6-2, 6-3 என்ற கணக்கில் எளிதாக வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தைத் தட்டிச் சென்றார்.

விளையாட்டு

சச்சினை பாதுகாப்பது தொடர்பாக ஆலோசனை நடத்தி வருகிறோம்!

இந்திய பயிற்சியாளர் சப்பல் கூறுகிறார்



ஜெய்ப்பூர்

டெண்டுல்கர் சவாலைச் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டு தீரம் படவிளையாடுபவர், அவரது போக்கிலேயே அவர் விளையாடவேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோமென இந்திய அணியின் பயிற்சியாளர் சப்பல் தெரிவித்தார். நீண்ட இடைவேளைக்குப் பின்பு அவர் அணிக்குத் திரும்பியிருக்கிறார்.

அதிகப்படியான சுமையை ஏற்றி சச்சினுக்கு பதட்டத்தைக் கொடுக்க நாங்கள் விரும்பவில்லை. இந்திய அணியின் நலனுக்காக டெண்டுல்கரை பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும். இது தொடர்பாக நாங்கள் ஆலோசனை நடத்தி வருகிறோம்.

அணியில் பல்வேறு சோதனை முயற்சிகளை நான் செய்து வருகிறேன். அணியை தரம்மிக்கதாக உயர்த்த இத்தகைய சோதனை முயற்சிகளும் தொடரும். அனைத்து பயிற்சிகளும் அணிக்காகவே செய்யப்படும். தனிப்பட்ட நலனுக்காகந்த வித பரிசோதனையும் செய்யப்பட மாட்டாது.

இதன்படி சில வீரர்களிடம் அணியின் நலனுக்காக அவர்களது விளையாட்டு முறையை மாற்றி அமைக்கும் படி கேட்டுக் கொள்ளப்பட்டது. அவர்களும் அதற்கு முழு ஒத்துழைப்பு கொடுத்தார்கள். ஒவ்வொரு வாய்ப்பையும் நாங்கள் பயன்படுத்துவோம். அது ஒரு போட்டியாக இருந்தாலும் சரி அல்லது 10 போட்டியாக இருந்தாலும் சரி. இவ்வாறு அவர் கூறினார்.

தொடக்க வீரராக 11000 ஓட்டங்கள்

ஜெய்ப்பூர்

சச்சின் ஒருநாள் போட்டியில் தொடக்க ஆட்டக்காரராக தனது 11 ஆயிரம் ஓட்டங்களை நேற்றுமுன்தினம் எட்டினார்.

251ஆவது போட்டியில் தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கிய இவர் முதல் ஓட்டத்தை எடுத்தபோது இந்த மைல்கல்லைக் கடந்தார்.

அதேவேளை, நேற்றுமுன்தினம் சச்சினின் விக்கெட்டை 8ஆவது முறையாகக் கைப்பற்றினார் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் சமிந்த வாஸ். இதன் மூலம் சச்சினை அதிக முறை ஆட்டமிழக்கச் செய்தவர் என்ற புதிய சாதனை படைத்தார்.

டோனியின் புதிய சாதனை!

ஜெய்ப்பூர்

அதிக ஓட்டங்கள் எடுத்த விக்கெட் காப்பாளர் என்ற உலக சாதனையை ஜெய்ப்பூர் போட்டியில் நிகழ்த்தினார் டோனி. 183 ஓட்டங்கள் குவித்ததன் மூலம் அவுஸ்ரேலியாவின் கில்கிறிஸ்ட் (172, எதிர்:சிம்பாப்வே) சாதனையை முடியடித்தார்.

மேலும் ஒருநாள் போட்டியில் 2ஆவது சதத்தையும், இந்த மைதானத்தில் அதிக ஓட்டங்கள் அடித்த பெருமையையும் பெற்றார்.

அத்துடன் 10 சிக்ஸர்கள் விளாசிய தன் மூலம் சச்சின், கங்கூலி ஆகியோரின் சாதனையையும் முறியடித்துள்ளார். அதிக சிக்ஸர் அடித்த இந்திய வீரர் என்ற பெருமையையும் இவர் பெற்றுள்ளார். சச்சின் (1997-98, எதிர்: அவுஸ்ரேலியா), கங்கூலி (1999, எதிர்:இலங்கை) இருவரும் தலா 7 சிக்ஸர்களை அடித்துள்ளனர்.

உலகில் அதிக சிக்ஸர்களை அடித்த வீரர்கள் பட்டியலில் இரண்டாவது இடத்தையும் இவர் பெற்றுள்ளார். முதல் இடத்தில் ஜெயசூரிய, அப்ரிடி ஆகியோர் தலா 11 சிக்ஸர்களுடன் உள்ளனர்.

இதனிடையே இலங்கைக்கு எதிரான ஒருநாள் போட்டியில் ஆட்டமிழக்காமல் 183 ஓட்டங்களை அடித்து விளாசிய மகேந்திரசிங் டோனிக்கு 12.5 லட்சம் ரூபா நன்கொடை மற்றும் வீடு ஒன்றையும் பரிசாக வழங்குவதாக ஜார்க்கண்ட் முதல்வர் அர்ஜுன் முண்டா அறிவித்தார்.

இந்திய – தென்னாபிரிக்க அணிகளின் போட்டி அட்டவணை வெளியிடப்பட்டது!

புதுடெல்கி

இந்தியா-தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையே சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடர் இந்த மாதம் 16ஆம் திகதி தொடங்கவுள்ளது.

எதிர்வரும் 28ஆம் திகதி வரை இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ளன. இந்தத் தொடரின் மூன்றாவது போட்டி சென்னையில் 22ஆம் திகதி நடைபெறும். இந்தப் போட்டி பகலிரவு ஆட்டமாக நடைபெறும்.

இந்தப் போட்டிகள் நடைபெறும் திகதி, இடம், நேரம் குறித்த விபரம் வருமாறு - நவம்பர் 16-ஹைதராபாத்: காலை 9 மணி, நவம்பர் 19-பெங்களூர்-பிற்பகல் 2.30 மணி, நவம்பர் 22: சென்னை-பிற்பகல் 2.30 மணி, நவம்பர் 25:கொல்கத்தா-பிற்பகல் 2.30 மணி, நவம்பர் 28:மும்பை - பிற்பகல் 2.30 மணி.

பாகிஸ்தானில் கடந்த 8ஆம் திகதி ஏற்பட்ட பூகம்பத்தால் ஆயிரக் கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உதவும் வகையில் வேகப்பந்து வீச்சாளர் சொகைப் அக்தர் ரூ.10 லட்சம் நிதியை பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் வகாரி யார்கானிடம் வழங்கிய காட்சி.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சா/த) பரீட்சை -2005 மாதிரி வினாத்தாள்

தமிழ்மொழியும் இலக்கியமும் பகுதி -I

பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்தில் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. புறணி நற்றவம் யாவையும் தின்றிடும் - புறணி என்பதன் ஒத்தகருத்துச் சொல்
1) பொய்யுரைத்தல் 2)புறங்கூறல்
3)புற்கணித்தல் 4) வீண்பேச்சு

02. அருவிபாய ஓடு மாதங்கமே உருளுமாதங்கமே - மாதங்கம் குறிக்கும் இரு பொருள்கள்
1) யானை - அரசமரம் 2) தங்கக்கட்டி - கடல்
3) ஓடம் - பாறை 4) தங்கநிறம் -கடலலை

03. அரசனின் வள்ளன்மையை சங்கப்புலவர் போற்றினர் - வள்ளன்மை என் பதன் எதிர்ப்பதம்
1) உலோபி 2) இறவன்மை 3) இவறன்மை 4) கொடையாமை

04. நவீனரக ஆடையணிகளையே மாதர் விரும்புகின்றனர் நவீனம் என்பதன் எதிர்ப்பதம்
1) பழைமை 2)புராதனம் 3) பிராசீனம் 4) அநாகரிகம்

05. தபுதாரன் மறுமணம் செய்வதை சமூகம் ஏற்றுக்கொள்ளும். தபுதாரன் என்பதன் எதிர்பாற் சொல்.
1) தபுதாரி 2) தபுதாரன் 3) விதவை 4) தபுதாரினி

பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப்பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

06. ..... உடையார் இகழ்ச்சி அடையார்
1) முயர்ச்சி 2) முயற்சி 3) முயற்சி 4) முயட்சி

07. அரசாங்க எழுதுவினைஞர் சேவை நியமனங்கள் பற்றிய விதிமுறைகள் ..... பிரசுரிக்கப்படும்.
1) சுற்று நிருபத்தில் 2)கையேட்டில்
3)வர்த்தமானியில் 4) விண்ணப்பத்தில்

08. வீமனின் கோபம்..... போல அடங்கிக் கிடந்தது.
1) எரிமலை 2) இலைமறைகாய்
3) நீறுபூத்த நெருப்பு 4) தீப்பொறி

09. தமிழ் வளர்த்த முச்சங்கங்கள் அழிவதற்கு..... காரணமாயிற்று
1) ஏறுகோள் 2) கால்கோள்
3) ஊர்கோல் 4) கடல்கோள்

10. பாடசாலையில் குற்றம் புரிந்த மாணவனுக்கு அதிபரால்..... வழங் கப்பட்டது.
1) வெகுமதி 2) தண்டனை 3) அபராதம் 4) பரிகாரம்

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

11. அகர வரிசைப்படி அமைந்த சொற்களின் பொருள் கூறும் நூல்.
1) நெடுங்கணக்கு 2) அகராதி 3) கலைக்களஞ்சியம் 4) நிகண்டு

12. நடன நிகழ்ச்சி ஒன்றினை மேடையில் ஒழுங்குற நெறிப்படுத்தல்
1) அரங்கேற்றம் 2)ஒத்திகை 3) வரன்முறை 4) நட்டுவாங்கம்

13. பறவையின் மலம் எச்சம் போல யானையின் மலம்
1) சாணம் 2) பிழுக்கை 3) இலத்தி 4) விட்டை

14. எழுபத்தைந்து ஆண்டுகள் முடிவடையும் போது எடுக்கப்படும் விழா
1) வைரவிழா 2) வெள்ளிவிழா
3)பவள விழா 4) பொன்விழா

15. சபையின் சொல்லத்தகாத சொல்லை மறைத்து வேறுவகையில் சொல்லு தல்
1) இரட்டுறமொழிதல் 2)இடக்கரடக்கல்
3)சிலேடை 4) இராக்கதம்

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

16. பின்வருவனவற்றுள் வித்தியாசமான கருத்தைத் தரும் பழமொழி
1) கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னமாகுமா?
2) மயிலே மயிலே இறகு போடென்றால் போடுமா?
3) முக்காலும் காகம் மூழ்கிக் குளித்தாலும் வெள்ளைக் கொக்காகுமா?
4) உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?

17. நம்பிக்கைத் துரோகம் செய்தல் என்னுங்கருத்துடைய மரபுத் தொடர்
1) கழுத்துக் கொடுத்தல் 2) கழுத்தறுத்தல்
3)கழுத்திற் கட்டுதல் 4) கழுத்தைக் கட்டுதல்

18. கூடிய முயற்சி குறைந்தபயன் என்னுங்கருத்தமைந்த பழமொழி
1) சுண்டைக்காய் காற்பணம் சுமைக்கூலி முக்காற்பணம்
2) செல்வமென்பது சிந்தையின் நிறைவே
3) சிறுதுளி பெருவெள்ளம்
4) குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர்

19. குற்றம் செய்தவனிருக்க வேறொருவன் தண்டனை பெறல் என்பதை உண ர்த்தும் உவமைத் தொடர்
1) உட்சுவர் இருக்கப் புறச்சுவர் தீற்றுதல் போல
2) எய்தவன் இருக்க அம்பை நோவது போல
3) ஆனைவாய் அகப்பட்ட கரும்பு போல
4) கரும்பு தின்னக் கூலி கேட்பது போல

20. பின்வருவனவற்றுள் பொருளில் பெரிதும் வேறுபடும் தொடர்
1) குறுகுறு நடந்து குதவை மொழிந்து
2) நடை தளர்ந்து நாத்தடுமாறி
3) குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
4) தளர் நடை நடந்து மழலை மொழிந்து

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.

21. பின்வருவனவற்றுள் புறச்சுட்டுக்கு உதாரணம்
1) அவன் 2) இவன் 3) அம்மனிதன் 4) அது

22. பின்வருவனவற்றுள் திரிதல் புணர்ச்சி பெறுவது
1) பால் + குடம் 2) மா + இலை
3) மரம்+வேர் 4) கடல்+ அலை

23. பின்வருவனவற்றுள் குற்றியலுகரமல்லாதது.
1) வரகு 2) பாம்பு 3) நடு 4) நாடு

24. வினைத்தொகையாக வந்துள்ள தொடர்
1) பாய்மா 2) பவளவாய் 3) வட்டக்குகை 4) இராப்பகல்

25. மூன்றாம் வேற்றுமை கருத்தாப் பொருளில் வந்த வாக்கியம்
1) தாயோடு மகள் சென்றாள்
2) என்னாற் கட்டுரை எழுதப்பட்டது
3) நான் பேனாவால் எழுதினேன்
4) வாளினால் மரத்தை வெட்டினான்

26. அருமருந்தன்ன என்பது அருமருந்த என்று வழங்கப்படுவது
1) குழூ உக்குறி 2) மரூஉ
3) இலக்கணப்போலி 4) இலக்கணமுடையது

27. விமலன் சுறுசுறுப்பாக வேலை செய்தான். சுறுசுறுப்பு என்பது
1) இரட்டை மொழி 2) அடுக்குத்தொடர்
3) அடுக்கிடுக்குத்தொடர் 4) இணைமொழி

28. பின்வருவனவற்றுள் இறந்தகால பெயரெச்சம்
1) வந்து 2) வந்த 3) வருகின்ற 4) வந்தவன்

29. தரப்பட்ட சொல்வகைக்குப் பொருந்தாத ஒரு சொல் இடம்பெறும் வரிசை
1) சினைப்பெயர்-கண், மலர், வாய்
2) குணப்பெயர் - பண்பு, அன்பு, வட்டம்
3) காரணப்பெயர்- மரம், பறவை, மண்வெட்டி
4) வேற்றுமை உருபு-ஐ, ஓடு, இல்

30. பின்வருவனவற்றுள் செயற்படுபொருள் குன்றியவினை
1) பாலன் விழுந்தான் 2) பாலன் விளையாடினான்
3) பாலன் பாடினான் 4) பாலன் ஆடினான்

பின்வரும் வினாக்களில் வாக்கியத்தின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.

31. செய்யுள்களுக்கு மாணவர்களால்
1) பொருள் எழுதியது 2) பொருள் எழுதப்பட்டது
3) பொருள் எழுதினர் 4) பொருள் வகுத்தனர்

32. இந்த அடைமழையில் நீ வந்ததும் அல்லாமல்
1) பிள்ளையை அழைத்து வந்தாயா?
2) பிள்ளையையுமா அழைத்து வந்தாயா?
3) பிள்ளையினை அழைத்தாய் வந்தாய்
4) பிள்ளையையுமா அழைத்து வந்தாய்?

33. அவன் எவ்வளவோ முயற்சிசெய்தும்
1) பரீட்சையில் சித்தியடைந்தான் 2) பரீட்சையில் சித்தியடைந்தானா?
3) பரீட்சையில் சித்தியடைந்திலன் 4) பரீட்சையில் சித்தியடைவானா?

34. வேடன் விரித்த வலையில் மான் கூட்டம்
1) அகப்பட்டன 2) அகப்பட்டது
3) அகப்பட்டனர் 4) அகப்பட்டுக்கொண்டன

35. நகர்க் காவலர் எவ்வளவு முயன்றும் தப்பி ஓடிய திருடனைக்
1) கண்டுபிடித்தனர் 2) கண்டுபிடிக்கவில்லை
3) கண்டுபிடிப்பார்கள் 4) கண்டு பிடிக்கலாம்

பின்வரும் பந்தியை வாசித்து, அதன் கீழுள்ள வினாக்களுக்குப் பொருத் தமான விடையைத் தெரிவு செய்க

மக்கள் உயிர் வாழ்க்கைக்கு மட்டுமன்றி, இந்நிலவுலகத்துள்ள எல்லா உயிர் களுக்குமே நீரானது மிகவும் தேவையுள்ளதாயிருக்கிறது. பாருங்கள்! உயிர்த் தொகுதிகளுள் மிகவும் கீழ்ப்படியான நிலையிலிருக்கும் மரஞ்செடி, கொடி களும், புல்பூண்டுகளுங்கூடத் தண்ணீரையே பெருங்கருவியாய்க்கொண்டு உயிர்பிழைத்து வருகின்றன. பார்வைக்கு வெறுமையாகத் தோன்றுந் தீஞ் சுவைத் தண்ணீரைப் பருகி, அவைகளெல்லாங் கவருங்கோடும், கொப்பும் வளரும், துளிரும் இலையும் பிஞ்சுங்காயுங் கனியுமாய்ச் செழித்து எவ்வளவு பொலிவாய்த் தோன்றுகின்றன? நான்கைந்தாண்டுகள் மழை பெய்யாதுவிட நிலம் வறண்டுபோமாயின் அவைகளெல்லாங் காய்ந்தும், பட்டும் போகும் என்பது எவருக்குத்தான் தெரியாது. இன்னும் அம்மரங்களில் உறையும் விலங்குகளும் கான்யாறுகளிலும் சுனைகளிலும் மழைவீழருவிகளிலும்

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சா/த) பரீட்சை -2005 மாதிரி வினாத்தாள்

இருக்குந் தெளி நீரைப்பருகி, எவ்வளவு களிப்பாய் உயிர் வாழ்கின்றன. மழைக் காலத்தில் நம்மனோர் தண்ணீரின் அருமையை உணராவிடினும், வேனிற் காலத்து வெப்பம் தாங்காமல் துடிக்குங்கால், அவர்கள் தண்ணீரே உயி ரென்று கூறுகின்றதைக் காண்கின்றோம் அன்றோ?

36. இவ்வுரைப் பகுதியாசிரியர் வாசகனுக்குப் புலப்படுத்தவிரும்பும் தலைமைக் கருத்து
1) நீரின் இன்றியமையாமை 2) நீரின் இயல்பு
3) தாவரங்களுக்கு நீர் அவசியம் 4) நீர் பற்றி எல்லாரும் அறிவர்

37. தலைமைக்கருத்தை விரித்துரைக்க ஆசிரியர் கைக்கொண்ட முறை
1) வருணனை முறை
2) உதாரணங்காட்டி விளக்கும் முறை
3) காரணங்காட்டி விளக்கும் முறை
4) உவமைகாட்டி விளக்கும் முறை

38. பறவைகள், மிருகங்கள் பற்றிய கூற்று
1) வருணனைப் பாங்கானது 2) வரலாற்றுப் பாங்கானது
3) ஆராய்ச்சிப் பாங்கானது 4) மிகைபடக் கூறுவது

39. இப்பகுதியைப் பின்வரும் உரைநடையில் எதில் அடக்கலாம்
1)வெள்ளை நடை 2) ஒழுகிசைநடை
3) தனித்தமிழ் நடை 4) செந்தமிழ் நடை

கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெறவைத்தால், கட்டுக்கோப்பான பந்தியொன்றமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்குப் பொருத்தமான வைப்புமுறையைத் தெரிவு செய்க.

40. அ. தமிழ் மாலுமிகளும், வர்த்தகர்களும் சென்ற நாடுகள் சிலவற்றில் சில தமிழ்ச்சொற்கள் ஆங்காங்கு புகுந்து வழங்கப்படலாயின.

ஆ. "திரைகடலோடியும் திரவியம் தேடு" என்று ஔவைப்பிராட்டியார் கூறிய உபதேசம் மிகப்பழங்காலந்தொட்டுத் தமிழ் மக்கள் கடைப் பிடித்துவந்த ஒரு கொள்கையை ஒட்டியதாகும்.

இ. பாலஸ்தீன நாட்டையாண்ட சொலமன் என்ற அரசன்காலத்திலே தோகைகள் அங்கு இறக்குமதி செய்யப்பட்டன என்று அந்தநூல் கூறு கிறது.

ஈ. கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே, தமிழ் வாணி கம் கிழக்குத் திக்கிலும், மேற்குத் திக்கிலும் பல நாடுகளிற் பரவியிருந் தது என்பது சரித்திர ஆராய்ச்சியாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை.

உ. யூதர் ஹிப்ரு மொழியில் எழுதிய பைபிள் என்ற சமய நூலிலே தோகை என்ற தமிழ்ச்சொல் துக்கிம் என்று மருவிய வடிவிற் காணப்படுகிறது.
1) ஆ,இ,உ,அ,ஈ 2) அ,இ,ஆ,உ,ஈ
3) ஆ,ஈ,அ,உ,இ 4) ஆ,உ,ஈ,அ,இ

பகுதி - II

01. பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு ஏதாவது ஒரு கட்டுரையைத் தெரிவு செய்து, 300 சொற்களுக்குக் குறையாமல் கட் டுரை எழுதுக.

அ. நீர் வாழும் பிரதேசத்தில் நீண்டகாலமாக வரட்சி காணப் படுகிறது. அதனால் பச்சைப் பசேல் எனக் காணப்பட்ட பயிரி னங்கள், மரஞ் செடி கொடிகள் எல்லாம் கருதிய நிலையில் காட்சி கொடுக்கின்றன. அதுமட்டுமல்லாமல் மிருகங்கள் குடிக்க நீரின்றி, நீர் நிலைகளைத் தேடி அலைகின்றன. மக்களும் நீரைப் பெறு வதற்காக நீண்ட தூரம் நடந்து செல்லவேண்டிய நிலை. இத னால் மழையை வேண்டி ஆலயங்களில் பிரார்த்தித்தனர். இவற் றைக் கருத்தில் கொண்டு உமது பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சி என்பது பற்றிய வர்ணனை.

ஆ. ஆரம்பகாலத்தில் இலை குழைகளாலும், மரப்பட்டைகளாலும் தமது மானத்தைக் காத்துக் கொண்ட மனிதன்- இன்று பல்வேறு வகையான நூல்களினால் இழைக்கப்பட்ட ஆடைகளை அணி கின்றான். அது மட்டுமன்றி, நவநாகரீகமான அமைப்புக்களில் தனது ஆடை ஆபரணங்களை நாளுக்கு நாள் மாற்றிக் கொள் கிறான். இவற்றைக் கருத்திற் கொண்டு, ஆடை ஆபரணங்களை அணிவதில் அன்றைய மக்களும், இன்றைய மக்களும் என்னும் பொருள்பற்றிய உரையாடல் ஒன்று.

இ. நவீன விஞ்ஞான தொழில்நுட்பத் துறைகளில் இன்று துரித வளர்ச்சி கண்டுள்ள தகவல் தொடர்பாடல் முறைகள் மீது விஞ்ஞான தொழில்நுட்பம் ஆதிக்கம் செலுத்துகின்றது. இதன் மூலம், சர்வ தேசம் சுருங்கி ஒரு கிராமம் என்ற அளவில் வருவதை இன்று நாம் காணக் கூடியதாக உள்ளது. இந்த மாற்றங்களை மனங்கொண்டு அம் மாற்றங்களை எதிர்கொள்ளப்போகும் எமது இளஞ்சந்ததியின ருக்கு ஆங்கிலக் கல்வி அவசியம் என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

ஈ. காடுகள் அழிக்கப்படுகின்றன. தெரு வீதிகளில் காணப்படுகின்ற பெரிய மரங்கள் வெட்டப்படுகின்றன. காடுகளை உறைவிட மாகக் கொண்ட மிருக இனங்கள் இருப்பிடம் தேடி அலை கின்றன. இவற்றினால் மழைவளம் குறைகிறது. இவற்றிலிருந்து எமது நாட்டை நாம் காப்பாற்ற வேண்டுமானால், இயற்கை வளம் பேணப்பட வேண்டும் என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

உ. நள்ளிரவு பன்னிரெண்டு மணி நான் ஆழ்ந்த தூக்கத்தில் என்னை மறந்து உறங்கிக் கொண்டிருந்தேன். என்னைச் சுற்றி பயங்கரமான பாம்புகள் பல படமெடுத்த வண்ணம் நின்றன. என்னைக் கொத்தி விடுமோ என்ற அச்சத்தில் எதுவுமே செய்ய முடியாத நிலையில் எனது கண்ணைத் திறந்து பார்க்கப் பயந்து ..... இந்தச் சம் பவத்தைத் தொடர்ந்து நான் கண்ட பயங்கரக் கனவு என்ற தலைப் பில் கற்பனைச் சித்திரம் ஒன்று எழுதுக.

02. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றைத் தெரிந்து 100 சொற் களுக்குக் குறையாது எழுதுக.

அ. கலாமன்றத்தின் கலைவிழா ஒன்றிற்கான அழைப்பிதழ் தயா ரித்தல்

கீழே தரப்பட்ட உரையாடலை வைத்து அழைப்பிதழ் தயாரித்தல்

துலக்ஷன்: என்ன புருசோத்மன் கலாமன்ற கலை விழாவிற்கு யாரைப் பிரதம அதிதியாக அழைப்போம்.

புருசோத்மன்: அதிபர் தி.கணேசராசாவை அழைப்போம். அவருக்கு இலக்கியத்தில் நிறைந்த ஈடுபாடு.

பிரவீனா: வரவேற்புரையை உப அதிபர் திரு.கா.பாலசிங்கம் அவர் கள் நிகழ்த்துவார்.

கோபிகா: தலைமையுரையை மன்றக் காப்பாளர் திரு.ச.சிவகுமார் நிகழ்த்துவார்.

ஞானம்: கலையின் சிறப்புப் பற்றி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசியல் பேராசிரியர் க.சுப்பிரமணியம் நிகழ்த்துவார்.

பிரவீனா: அது சரி இன்னும் 20 நாட்கள் தானே இருக்கின்றன. டிசம்பர் 15 ஆம் திகதி சனிக்கிழமைக்குள் எல்லாம் நிறை வேறிவிடுமா?

சோபிகா: நாம் எல்லோரும் உற்சாகமாகச் செயற்பட்டால் எல்லாம் சிறப்பாக நிறைவுறும். நேரத்தில் ஒரு சிறிய மாற்றம் பி.ப. 4மணி என்றிருப்பதை, 6 மணிக்கு ஆக்குமாறு தலைவர் கூறினார்.

கிருஷா: முத்தையா மண்டபத்தை அலங்கரிப்பது ஞானத்தின் பொறுப்புத்தானே. பிரவீனா நன்றியுரை சிறப்பாக இரு க்க வேண்டும்.

03. பின்வரும் தொனிப்பொருளை அடிப்படையாகக் கொண்டு அவற் றைச் சுருக்கி 75 சொற்களில் எழுதுக.

அ. மக்கள் அனைவரும் விரும்புவது இன்பமே. இன்பத்தை அடை வதற்குக் கருவியாய் அமைவது செல்வம். இது கல்விச் செல்வம், பொருட் செல்வம் என இரண்டு வகைப்படும். பொன், மணி முதலிய பொருட்செல்வத்திலும், கல்விச் செல்வமே சிறந்தது. ஏனெனில் பொருள் பங்காளிகளால் பகுத்துக் கொள்ளப்படும். கோபங்கொண்ட கொடுங்கோல் மன்னர்களால் எடுத்துக் கொள்ளப்படும். வெள்ளத்தால் அழிக்கப்படும் வெந்தழலால் வெந்து சாம்பலாகிவிடும். தம்மை அண்டியோருக்கு அளித்தாற் குறையும், இவற்றால் பொருள் அழியும் தன்மையுடையது என் பதை அறியலாம். அன்றியும் அது பெரும்பாலும் தக்காரிடத்து உண்டாகி நிலைபெறாது, உடலோடு அழிவதுமாகும். மேலும், அதனை ஈட்டல், காத்தல், இழத்தல், என்பனவற்றால் மக்கள் துன்புறுவர். அது பலரையும் பகையாக்கும்.

ஆ. கல்வியோ எவராலும் கவரமாட்டாது. தீ, வெள்ளம் முதலிய வற்றால் நாசமுறாது. பிறருக்குக் கொடுக்க கொடுக்க வளருமே யன்றிக் குறையாது. ஆகவே, இது அழியும் தன்மை உடையது அன்று. மேலும் தக்காரிடத்தே உண்டாகி நிலை பெறும் ஒரு வனது உடல் அழியினும், அவன்கற்ற கல்வி அழியாமல் உயி ரோடிருந்தது. அவ்வுடல் சென்றவிடத்து சென்றுதவும் இதனை ஈட்டலும், காத்தலும் எளிது. இழத்தலே இல்லை. பகைமை யையும் நட்பாக்கும் கல்வியாவது கற்பதற்குரிய நூல்களைக் கற்றல், அந்த நூல்கள், அறநூல், அறிவியல் நூல், தொழில்நூல் முதலாகப் பலவகைப்படும். அனைவருக்கும் இன்றியமையாத பொதுக் கல்வியைப் பயின்று பின்னர் தமக்கு விருப்பமுள்ள சிறப்புக் கல்வியிலே தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

இ. கற்கப்படும் நூல்களுக்கு கருவியாய் இருப்பது எண்ணும், எழுத் தும், எண்ணென்பது கணிதம், எழுத்தென்பது இலக்கணம். இவ் விரண்டு மக்களுக்கு இரு கண்கள் என்று அறிந்தோர் சிறப் பித்துக் கூறுவர். இவ்விரண்டும் பெற்றவர் ஞானக்கண் பெற்ற வராதலின் அவர்தாம் இருக்கும் இடத்தில் இல்லாமல், வெவ் வேறு இடத்திலுள்ள பொருட்களையும் காண்பர். இவ்விரண் டையும் கல்லாதவர் எல்லா இடத்திலும், எல்லாக் காலத்திலும் உள்ள பொருட்களைக் காணும் ஆற்றலைப் பெற்றிலார்.

04. பின்வருவனற்றுள் ஒன்றை மட்டும் தெரிந்து எழுதுக.

அ. இலங்கைக்கு வரவிருக்கும் உமது பேனா நண்பனுக்கு இங்கு அவர் பார்த்து மகிழக்கூடிய 3 இடங்கள் பற்றிய விபரம் கொண்ட கடிதம்.

ஆ. முதியோர் பராமரிப்பு நிலையம் ஒன்றினை உமது பிரதேசத்தில் அமைப்பதற்கு பொது மக்களின் ஆதரவைக் கோரிப் பத்திரி கைக்கு ஓர் கடிதம்

இ. பாடசாலை சமய மன்றத்தின் செயலாளர் என்ற முறையில் உமது பாடசாலையில் சமய விழா ஒன்று பற்றிய அறிக்கை

05 ஆபத்துக்குதவாப் பிள்ளை
அரும்பசிக்குதவா அன்னம்
தாகத்தைத் தீர்க்காத தண்ணீர்
தரித்திரம் அறியா பெண்டிர்
கோபத்தை அடக்கா வேந்தன்
குருமொழி கொள்ளா சீடன்
பாவத்தை தீரா தீர்த்தம்
பயனிலை ஏழும் தானே

அ. எவ்வெவற்றால் பயனில்லை என்றார்?
ஆ. தரித்திரம் என்று கூறுவது யாது?
இ. இப்பாடல் எந்தநூலில் இருந்து எடுக்கப்பட்டது?
ஈ. இப்பாடலில் பொருளை உமது சொந்த ஊரை நடையில் எழுதுக.

T.T.மாறன்

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு

யாழ். மாநகரசபை நடத்திய கட்டுரை, பேச்சு போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்—

யாழ்.மாநகர சபையால் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட கட்டுரை,பேச்சுப் போட்டிகளில் பரிசு பெற்றோர் விபரம் வருமாறு -

கட்டுரைப்போட்டி

மேற்பிரிவு:1ஆம் இடம்- யூட்ஸ் சுஜனி யேசுராசா (யா/திருக்குடும்ப கன்னியர் மடம்), 2ம் இடம்-ரேணுகா நாகராசா (யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்), 3ஆம் இடம்- காஞ்சனா ஹரிகரன்(யா/நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை).

மத்தியபிரிவு

1ஆம் இடம்-அன்ரன் சகாய நாதன் பிரசாந் (யா/புனித பத்திரிசியார் கல்லூரி), 2ஆம் இடம் - ஜீவராசா ஜனந்தராஜா (யா/புனித பத்திரிசியார் கல்லூரி), 3ஆம் இடம்- முடியப்பு அன்ரன் துஷான்(யா/புனித பத்திரிசியார் கல்லூரி).

கீழ்ப்பிரிவு

1ஆம் இடம்- அ.சவந்தரம், ஜோ.மஞ்சுதன் (யா/புனித பத்திரிசியார் கல்லூரி), 2ஆம் இடம் பி.பி.பிரகேஸ்வரன் அன்றோ லைவ்ரன் ஜெவ்றி (புனித பத்திரிசியார் கல்லூரி), 3 ஆம் இடம் - அவிபெனிஸ்லஸ் துஷான் (யா/புனித பத்திரிசியார் கல்லூரி).

பேச்சுப்போட்டி

மேற்பிரிவு

1ஆம் இடம்- ரேணுகா நாக ராஜா(யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்), 2ஆம் இடம்- சாரு கேசி சண்முகசுந்தரலிங்கம் (யா/இந்து மகளிர் கல்லூரி), 3ஆம் இடம்-யோய் றோஸ்அன்ரனி(யா/திருக்குடும்ப கன்னியர்மடம்).

மத்திய பிரிவு

1ஆம் இடம்- சியாம் அஜந்தன் (யா/புனித பத்திரிசியார் கல்லூரி), 2ஆம் இடம், ஜீவராசா ஜனந்தராஜ் (யா/புனித பத்திரிசியார் கல்லூரி), 3ஆம் இடம்-யோகேஸ்வரன் டிலக்ஷன் (யா/புனித பத்திரிசியார் கல்லூரி).

கீழ்ப்பிரிவு

1ஆம் இடம்- அன்ரனி குயின் மேரி தர்ஷியா (யா/பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலயம்), 2ஆம் இடம்- அன்ரன் றொமோசிகான் (புனித பத்திரிசியார் கல்லூரி), 3ஆம் இடம்- அ.சவந்தரம், ஜோ.சஞ்சுதன் (யா/புனித பத்திரிசியார் கல்லூரி).

கட்டுரைப்போட்டி

கீழ்ப்பிரிவு

1ஆம்இடம்-அன்ரன்றெமோசிகான்-(புனித பத்திரிசியார் கல்லூரி).

மத்திய பிரிவு

1. ஜெகநாதன் தர்ஷன் (யா/புனித பத்திரிசியார் கல்லூரி), 2. தர்மலிங்கம் தனஞ்செயன் (யா/புனித பத்திரிசியார் கல்லூரி), 3. தர்மலிங்கன் தாசன் (யா/புனித பத்திரிசியார் கல்லூரி), 4. சந்தியாப்பிள்ளை ஜோஜ் மில்லர் (யா/புனித பத்திரிசியார் கல்லூரி), 5. யோகேஸ்வரன் டிலக்ஷன்(யா/புனித பத்திரிசியார் கல்லூரி), 6. செபஸ்ரியாம்பிள்ளை பிறின்ஸ் (யா/புனித பத்திரிசியார் கல்லூரி), சியாம் அஜந்தன் (யா/புனித பத்திரிசியார் கல்லூரி).

கட்டுரைப்போட்டி

மேற்பிரிவு

1. பானுப்பிரியா சுப்பிரமணியம் (யா/கனகரத்தினம் ம.மவித்தியாலயம்), 2.பெலிக்ஸ் அல்பேட் தனுஜா சாந்தி (யா/திருக்குடும்ப கன்னியர்மடம்), 3. எஸ்கலான் டொமின் நில்டா (யா/பாஷையூர் புனித அந்தோனியார்).

பேச்சுப்போட்டி

கீழ்ப்பிரிவு

1. அ.வி.பெனிஸ்லஸ் துஷான் (யா/புனித பத்திரிசியார் கல்லூரி), 2. பி.பி.பிரகேஸ்வரன் அன்றோ லைவ்ரன் ஜெவ்றி (புனித பத்திரிசியார் கல்லூரி), வினிற்றா மக்கேரியர் (யா/அரியாலை ஸ்ரீ பார்வதி)

மத்தியபிரிவு

1. பிரான்ஸ் பிரான்சிஸ்கா (யா/பாஷையூர் புனித அந்தோனியார் றோ.க.ம.வித்.), 2. செபஸ்ரியாம்பிள்ளை பிறின் (புனித பத்திரிசியார் கல்லூரி).

அல்லாரை தும்புத் தொழிற்சாலைக்கு மண்டபம் அமைக்க நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்—

சாவகச்சேரி அல்லாரையில் தும்புத் தொழிற்சாலைக்கான பொதுச் சேவை நிலையம் ஒன்றை அமைப்பதற்கான ஒரு தொகை நிதி கிடைக்கப் பெற்றுள்ளதாகக் கைத்தொழில் அபிவிருத்திச்சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

அல்லாரையில் தும்புத் தொழிற்சாலைக்கான பொதுச் சேவை மண்டபம் அமைத்தல், தொழிற்சாலைக்குத் தேவையான உபகரணங்கள் கொள்வனவு மற்றும் பயிற்சி நடவடிக்கைகள் போன்றவற்றுக்கே கைத்தொழில் அமைச்சிடமிருந்து 1.5 மில்லியன் ரூபா கிடைக்கப் பெற்றுள்ளது.

அல்லாரையில் புதிதாக தும்புத் தொழிற்சாலை அமைக்கப்பட்டதும், இந்தப் பகுதியைச் சேர்ந்தோருக்கு தொழிற் பயிற்சிகள் வழங்கப்படும் எனவும் கைத்தொழில் அபிவிருத்திச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

உரும்பிராய் நலன்புரி நிலையங்களில் மலசல கூடங்கள் அமைக்கப்படுகின்றன

சுதுமலை—

கோப்பாய்ப் பிரதேச செயலர் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வதியும் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு மலசலகூடங்களை அமைத்துக் கொடுப்பதுடன், மலசலகூடப் புனரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இராணுவ நடவடிக்கை காரணமாக பலாலியிலிருந்து இடம் பெயர்ந்து 1990 ஆம் ஆண்டு முதல் உரும்பிராய்ப் பகுதியில் உள்ள நலன்புரி நிலையங்களில் வாழும் குடும்பங்களுக்கே இந்த வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது.

மேற்படி பகுதியில் நலன்புரி நிலையங்களில் வதியும் மக்களுக்கு குழாய் கிணறு, பாலர் பாடசாலை என்பவற்றை அமைத்துக் கொடுத்ததுடன், வீட்டு உபகரணங்களையும் சிறிய அளவில் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை- வலிகாமம் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து சுன்னாகம், அளவெட்டி, கோப்பாய், உரும்பிராய், இணுவில் பகுதிகளிலுள்ள மக்கள், அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு பலமுறை கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (91)

சின்னஞ்சிறு செய்திகள்

அறிவுறுத்தல் கூட்டங்கள்

யாழ்ப்பாணம்—

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் கடமையாற்றவுள்ள சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களில் ஒரு தொகுதியினருக்கான பயிற்சி வகுப்புக்கள் நேற்று முன்தினம் யாழ். செயலகத்தில் இடம்பெற்றது.

சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களின் அடுத்த தொகுதியினருக்கான பயிற்சி வகுப்புக்கள் நாளையும், உதவித்தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் 5ஆம் திகதியும் இடம்பெறவுள்ளது.

இதேவேளை - ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏனைய அனைத்துச் செயற்பாடுகள் யாவும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் யாழ். செயலக தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

தையல் வேலைகள் தெரிந்தவர்கள் தொடர்புகொள்ளவும்

யாழ்ப்பாணம்—

பெண்களுக்கான சகல ஆடைகளும் தைக்கத் தெரிந்தவர்கள் இத்துறையில் ஏனையோருக்குப் பயிற்சி வழங்கும் முகமாகப் பயிற்றுவிப்பாளர்களாகக் கடமையாற்ற யாழ். கைத்தொழில் அபிவிருத்திச்சபையுடன்தொடர்பு கொள்ளலாம் என சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆர்வமுடையோர் யாழ். செயலகத்துக்கு அண்மையில் தேசிய வீடமைப்பு அதிகார சபைக் கட்டடத்தில் இயங்கும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் யாழ். மாவட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இரத்தான முகாம்

சுதுமலை—

கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தின் இளவாலைப் பிராந்திய சமாதானப் பிரிவு, உயிர்ப்பூட்டல் குழு இளைஞர் - யுவதிகள் மற்றும் சிலாபம் இளைஞர் - யுவதிகளுடன் இணைந்து இரத்தான முகாமைக் கடந்த வாரம் நடத்தினர்.

இளவாலை புனித யாகப்பர் ஆலய வளாகத்தில் இடம்பெற்ற இந்த இரத்ததான முகாமில் யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கி அதிகாரி இ.சிவசங்கர், இரத்த வங்கிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் த.ரவீனதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ், சிங்கள இளைஞர்-யுவதிகளில் 36 பேர் இரத்த தானம் வழங்கி தன்னார்வக் குருதிக் கொடையாளர்களாகத் தம்மைப் பதிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (91)

மாணவர் மத்தியில் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்க பாடசாலைகளில் சேமிப்பு பிரிவு

யாழ்ப்பாணம்—

பாடசாலை மாணவர்களுக்கான சேமிப்பை ஊக்குவிப்பதற்காகவும், அதனூடாக அவர்களுக்கு சேமிப்புப் பழக்கத்தை மேம்படுத்தும் நோக்கத்துடனும் பாடசாலைகளில் சேமிப்பு பிரிவொன்றை ஆரம்பித்துள்ளதாக யாழ்.மாவட்ட இலங்கை வங்கி முகாமையாளர் ஏ.ரி.எ.தேவராஜா தெரிவித்தார்.

மாணவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதன் மூலம் மாணவர்களே வங்கி நடைமுறைகளைக் கற்று, அதனை நடத்தும் வாய்ப்பு உருவாகிறது. அவர்களே முகாமையாளராகவும், கணக்காளராகவும் இருந்து இதனை மேற்கொள்கின்றனர். இதனால் இவர்களுக்கு எம்மால் இதற்குரிய சான்றிதழ் வழங்கப்படுகிறது. இது இவர்களுக்கு ஒரு நேரத்தில் வேலை வாய்ப்புக்குச் செல்லும் போது உதவியாக இருக்கும். பாடசாலைகளில் சேமிப்பைத் தொடர்ந்து பேணும் மாணவர்கள் குறிப்பிட்ட அளவு தொகையை கணக்கில் வைத்திருப்பதால் அவர்களுக்கு இலவசக் காப்பீடு பேணப்படும். மற்றும் பாடசாலைகளுக்கு இதனை ஊக்குவிக்கும் முகமாக கற்றலுக்குத் தேவையான பொருட்களை வேண்டுவதற்கு காசோலையும் வழங்கப்படும். இவ்வாறானவற்றால் மாணவர்கள் மத்தியில் சேமிப்புப் பழக்கம் அதிகரித்துக் காணப்படும். அவர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்க வழிகாட்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

சங்கீத பூஷணம் ஆறுமுகம்பிள்ளை நினைவான அறக்கட்டளை நிதிய அங்குரார்ப்பண நிகழ்வு

சுதுமலை—

உடுப்பிட்டியிலுள்ள அமரர் சங்கீதபூஷணம் ஆறுமுகம் பிள்ளை நினைவான அறக்கட்டளை நிதிய அங்குரார்ப்பண நிகழ்வு எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொக்குவில் வளர்மதி நிறைவாழ்வு மையத்தில் நடைபெறவுள்ளது.

இசைத்துறைப் பாரம்பரியங்களைக் கட்டிக்காப்பதுடன், இசைத்துறை மாணவர்களின் கற்றல் புலத்திற்கு உதவும் நோக்குடன் இசைக் கருவிகளின் பயிற்சி வகுப்புகளையும் இந்த நிதியம் நடத்தவுள்ளதாக நிதியக் குழுவினர் தெரிவித்தனர்.

மேற்படி அறக்கட்டளை நிதியத்தில் எழுத்தாளர் எஸ். யோசப்பாலா, யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் ஆ.சத்தியசீலன், கொக்குவில் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் பஞ்சலிங்கம், வளர்மதி நிறைவாழ்வு மையத் தலைவர் செ.செல்லத்துரை ஆகியோர் அங்கத்தவர்களாக உள்ளனர்.

இசைத்துறையை, இசைத்துறை சார்பானவர்களைப் பேணிக்காப்பதுடன் இசைத் துறைக்கான தேடலை ஏற்படுத்தவும் இந்த நிதியம் செயற்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (91)

விபரங்களைப் பதியுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்—

2005 - மாவீரர் தினத்தன்று வெளிமாவட்டங்களிலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களுக்குச் செல்லும் மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் தங்கள் பெயர் விபரங்களை வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லப் பணிமனை காரியாலத்தில் 15-11-2005 க்கு முன்னர் பதிவு செய்து கொள்ளுமாறு மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் பணிவுடன் வேண்டுகின்றார். (116)

கலை கலாசார பேரவை கூட்டம்

யாழ்ப்பாணம்—

புதிதாக யாழ். செயலகத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட யாழ். மாவட்ட கலை, கலாசார பேரவைக் கூட்டம் - எதிர்வரும் 4 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் உறுப்பினர்களை அறிமுகம் செய்தல், உபகுழுக்களை அமைத்தல், பேரவையின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஆராய்தல் போன்றவை இடம்பெறும்.அனைத்துச் செயற்குழு உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

ஆறுமுகநாவலர் குருபூசை தினத்தை முன்னிட்டு மாணவரிடையே கட்டுரை, பேச்சுப் போட்டிகள்

யாழ்ப்பாணம்—

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 126 ஆவது குருபூசை தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையால் நடத்தப்படவுள்ள பேச்சு, கட்டுரைப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பேச்சுப் போட்டி கீழ் பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என 3 பிரிவாகவும், கட்டுரைப் போட்டி தரம் 12, 13 க்கு ஒரு பிரிவாகவும் நடத்தப்படவுள்ளன.

கீழ்ப் பிரிவில் பங்குபற்றும் தரம் 6, 7, 8 நாவலர் பிறந்திலரேல் எனும் பொருளில் 5 நிமிடங்களும், மத்திய பிரிவு தரம் 9, 10, 11 நாவலர் சைவசமயவாதி எனும் பொருளில் 7 நிமிடங்களும், மேற் பிரிவு நாவலர் கல்விப் பணி எனும் பொருளில் 10 நிமிடங்களும் பேச்சுப்போட்டிகள்நடைபெறவுள்ளன.

கட்டுரைப் போட்டிக்கு நாவலர் பெருமானின் வாழ்க்கை வரலாறுடன் தொடர்புடைய தலைப்பு, போட்டி நாளன்று வழங்கப்படும்.

போட்டிகள் யாவும் எதிர் வரும் 15 ஆம் திகதியன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். பங்குபற்ற விரும்புவோர் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை கௌரவ தேர்வுச் செயலாளர், 66, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு நிகழ்வு எதிர்வரும் 24ஆம் திகதியன்று நடைபெறும்.

புத்தூரில் காயமுற்ற இளைஞன் வைத்தியசாலையில் அனுமதி

யாழ்ப்பாணம்—

புத்தூரில் கடந்த வெள்ளிக்கிழமை பொதுமக்கள் மீது இராணுவத்தினரால் நடத்தப்பட்ட தாக்குதலில் காயமடைந்த இளைஞன் ஒருவன் நேற்று முன்தினம் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 28 ஆம் திகதி இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்த புத்தூர் கிழக்கைச் சேர்ந்த மாணிக்கம் தனேஸ் (வயது 23) என்பவரே நேற்று யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

மன்னாரில் காணப்படும் மின்விநியோக சீர்கேட்டினை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

மன்னார்

மன்னார் மாவட்டத்தில் காணப்படும் மின்சார விநியோக சீர்கேட்டினை, சீர் செய்ய நடவடிக்கை எடுக்குமாறுகோரி, மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சர் சுசில் பிறேம ஜயந்தவுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

மிகவும் பின்தங்கிய நிலையிலேயே மன்னார் மாவட்டம் தற்போதும் இருந்து வருகிறது. 1999 ஆம் ஆண்டிற்கு முன்னர் மன்னார் கிராமத்திற்கு மட்டும் ஜெனரேற்றர் மூலமாக மன்னார் பிரதேச சபையினால் மின்சாரம் வழங்கப்பட்டுவந்தது.

அதன் பின்னர் லக்சபான மின் விநியோகத்திட்டத்துடன் மின்விநியோகத்தை இணைப்பதற்கு கொரிய நாட்டு நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு, 1989 ஆம் ஆண்டு இடைப்பகுதியில் மின் விநியோகம் இலங்கை மின்சார சபையினால் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

லக்சபான மின்விநியோகம் தொடங்கிய காலத்திலிருந்து, சிறு கைத்தொழில்கள், பயிற்சி கூடங்கள் ஆகியன உருவாகின. வீட்டுப் பாவனைப் பொருட்கள் மின் உபகரணங்கள் மாற்றப்பட்டன. பிள்ளைகளின் கல்வி, பொழுதுபோக்கு காரணமாக பொருளாதார வசதியற்ற வீடுகளில்கூட தொலைக்காட்சிப் பெட்டிகள் இயங்க ஆரம்பிக்கப்பட்டன. க.பொ.த(சா/த), க.பொ.த(உ/த) ஆகிய பெறுபேறுகளுடன் தமது எதிர்காலம் பற்றி எவ்வித தீர்மானமும் எடுக்க முடியாமல் இருந்த இளைஞர், யுவதிகள் கணினிப் பயிற்சி வகுப்புகளில் தம்மை ஈடுபடுத்தினர்.

அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், வங்கிகள் ஆகியன கணினி மூலம் தமது நாளாந்த வேலைகளைக் கையாளத் தொடங்கின. மிகவும் பின் தங்கிய நிலையிலிருந்த இந்த மாவட்டம் - மின்னிணைப்பு கிடைத்த பின்னர், சிறிய முன்னேற்றத்தைக் காண முற்பட்ட வேளையில், மின்சார விநியோகத் தடை அடிக்கடி ஏற்படுவதும், மின்சாரம் கூடிக் குறைவதும் இந்த மாவட்டத்தின் முன்னேற்றத்திற்கான தடைக் கல்லாக அமைந்துள்ளது.

கடந்த முன்று மாதங்களாக நிலமை மிகவும் மோசமாக இருப்பதை அவதானிக்க முடிகிறது. ஒவ்வொரு மணித்தியாலத்திற்கிடையிலும் பல தடவை மின்சாரம்தடைப்படலாம்எனும் நிலையே தற்போது இருந்து வருகிறது.

சிறு கைத்தொழில்களில் ஆர்வம் காட்டி, ஒரு சிலருக்கு வேலை வாய்ப்பை அளித்தவர்கள் அடிக்கடி ஏற்படும் மின் தடையினால் வேலை ஆரம்பித்து, இடைநடுவில் நிறுத்தப்படும்போது முழு நாளைய வேதனம் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய நிலையில் தாம் பெரும் நடத்துக்குள்ளாவதாகத் தெரிவிக்கின்றனர்.

அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், வங்கிகள் ஆகியவற்றில் வேலைகளுக்குத் தடங்கல் ஏற்படுகின்றது. வீடுகளில் மின் பாவனைப் பொருட்களும் சேத மடைகின்றன. விவசாயிகளும் பெரும் துன்பத்துக்குள்ளாக வேண்டியுள்ளது. பொது மக்கள் தற்போதைய சீரற்ற மின்விநியோகத்தால் பெரும் சிரமப்படுகின்றனர்.

மின் இணைப்பிற்கென நாட்டப்பட்ட கம்பங்கள் சரிந்தநிலையில் காணப்படுவதால், வரப்போகும் வடகிழக்குப் பருவப் பெயர்ச்சி மழை காலத்தில் சரிந்து விழும் நிலையிலுள்ளன.

பிரதான மின் இணைப்பிற்கெனப் பொருத்தப்பட்டுள்ள சாதனங்கள், தரக்குறைவுடன் சக்தி குறைந்தனவாகவும் காணப்படுகின்றன.

தொடர்ச்சியான மழை, கடுங்காற்று காலம் அண்மித்துக் கொண்டிருப்பதால், மின்சாரம் முழுமையாக தடைப்படக் கூடிய நிலையே தற்போதுள்ளது.

இலங்கை மின்சார சபை, மன்னார் மாவட்டத்தில் பொறுத்தவரை ஓர் மாற்றாந்தாய் மனப்பான்மையைக் கடைப்பிடிக்கிறது.

எனவே இந்த விடயம் தொடர்பாக மின்சாரப் பொறியியலாளர் குழு ஒன்றை அனுப்பி மன்னார் மாவட்டத்திற்கு மின் விநியோகத்தடங்கலுக்கான காரணத்தை அறிந்து, நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகின்றேன் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைமன்னார் பிரதேசத்தில் டெட்டனேட்டர் கண்டுபிடிப்பு

தலைமன்னார்

தலைமன்னாரில் பெருமளவு டெட்டனேட்டர்கள் கைப்பற்றப்பட்டது. தலைமன்னாரிலிருந்து புறப்பட்ட பஸ்ஸை சோதனையிட்ட இராணுவத்தினரால் இவை கைப்பற்றப்பட்டன.

பஸ்ஸிலிருந்த ஒரு நபரை சந்தேகித்து, அவரின் பயணப் பொதியைச் சோதனையிட்டபோது அதிலிருந்து 2000 டெட்டனேட்டர்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

அவை நூறு நூறாகப் பிரிக்கப்பட்டு பொதி செய்யப்பட்டிருந்தது. கைதுசெய்யப்பட்ட மோகன்தாஸ் பிரான்ஸிஸ் யோசப்பிடம் விசாரணைகள் நடத்தப்பட்டுவருகின்றன.

இதனிடையே சுமார் 20 லட்சம் பெறுமதியான சட்டவிரோத சிகரெட்டுகளுடன் இருவர் மன்னாரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் சென்ற லொறியொன்றைச் சோதனையிட்ட படையினர் - அதிலிருந்து இலங்கையில் விற்பனை செய்யப்படும் சிகரெட்டுக்களை ஒத்த சட்டவிரோத சிகரெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளனர்.

மருத்துவ முகாமும் சுகாதார விழிப்புணர்வும்

கிளிநொச்சி

தமிழீழ சுகாதார சேவையினரின் ஒழுங்குபடுத்தலில் மருத்துவர்கள், மருத்துவ நிபுணர்கள் இணைந்து கிளிநொச்சி சாந்தபுரம் பாடசாலையில் இன்று 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை தொற்று நோய்கள் தொடர்பான சுகாதார விழிப்புணர்வு செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளனர்.

எனவே தொடர்ச்சியான தலையிடி, நெஞ்சுநோ, களைப்பு போன்ற உயர்குருதி அமுக்கத்துக்கான அறிகுறிகள், வாய்க் குளியினுள் வழமையை விட நிறமாற்றம் வாய்க்குழி மென் சவ்வு வழமைக்கு மாறாக காணப்படல் ஆகிய வாய்ப்புற்று நோய் ஆரம்ப அறிகுறிகளுடன் கூடிய வர்களும் மருத்துவ சிகிச்சை பெறுவதற்கு தவறாது சமூகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மனித நேய அமைப்புக்களின் கூட்டமைப்பு கிளை அலுவலகம் கிளிநொச்சியில் திறப்பு

கிளிநொச்சி

மனித நேய அமைப்புக்களின் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட கிளை அலுவலக திறப்பு விழா - கரைச்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஆனந்தபுரம் கிராம சேவையாளர் பிரிவில் உத்தியோக பூர்வமாக கடந்த 24 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

இந்த அலுவலகத்தை கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்பின் பிரமுகருமான இ.கணேசபிள்ளை திறந்து வைத்தார்.

கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் - தி.சௌசாங்கன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மனிதநேய கூட்டமைப்பின் முக்கியத்துவம், செயற்பாடு, மக்கள் பணி தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட அரச நிறுவன நிர்வாக அதிகாரி எஸ்.சுப்பிரமணியம் உரை நிகழ்த்தினார்.

முள்ளியவளை மூன்றாம் வட்டாரத்தில் நிர்கொட் திட்டத்தின்கீழ் பொது நோக்கு மண்டபத்துக்கான அடிக்கல் நாட்டு விழாவில் – கரைத்துறைப்பற்று பிரதேச சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர் க.சிவாஸ்குமார் மங்கள விளக்கை ஏற்றி வைப்பதையும், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரத்தினம் அடிக்கல்லை நாட்டி வைப்பதையும் படங்களில் காணலாம்.

– படம்.கனகரவி.

காலச் சுவட்டில்...

இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

நவம்பர் 02

1871: சிறையில் அடைக்கப்பட்ட குற்றவாளிகளைப் புகைப்படம் எடுத்து முதன் முதலாக பிரிட்டனில் "குற்றவாளிகள் புகைப்படத்தொகுப்பு" தயாரிக்கப்பட்டது.

1896: முதன் முதலாக பிரிட்டனில் "ஜெனரல் ஆக்சிடெண்ட் கம்பனி" என்ற நிறுவனத்தினால் வாகனக் காப்புறுதி அறிமுகப்படுத்தப் பட்டது.

1917: பாலஸ்தீனத்தில் யூதர்களுக்கும் தனி "தேசிய தாயகம்" அமைப் பதைப் பிரிட்டிஸ் அரசு ஆதரிக்கின்றது என்பதை வெளிப்படுத்திய "பால் ஃபோர் அறிக்கை" பிரிட்டிஸ் அரசினால் வெளியிடப்பட்டது.

1918: ரஸ்யாவில் தனியார் வர்த்தகம் தடை செய்யப்பட்டது. கூட்டுப் பண்ணைக்காக நூறு கோடி ரூபிள்கள் ஒதுக்கப்பட்டன.

1918: முதலாம் உலக யுத்தம் தொடர்பான யுத்த நிறுத்தப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின.

1920: முதன் முதலாக அமெரிக்காவில் தினசரி வானொலி ஒலிபரப்பு ஆரம்பமாகியது.

○: ஆர்மீனியா தனது எல்லைப் புறப் பகுதிகளை துருக்கிக்கு விட்டுக் கொடுத்தது.

1924: முதன் முதலாக பிரிட்டனின் "சண்டே எக்ஸ்பிரஸ்" என்ற செய்தித்தாளில் குறுக்கெழுத்துப் போட்டி வெளிவந்தது.

1929: செய்திப் படங்கள், விளையாட்டு நிகழ்ச்சிகளைத் திரையிடுவதற் கென்றே முதன் முதலாக நியூயோர்க்கில் "எம்பஸி" என்னும் திரையரங்கம் திறந்து வைக்கப்பட்டது. தொலைக்காட்சிகளது வருகை காரணமாக 1949 இல் இந்தத் திரை அரங்கம் மூடப் பட்டது. தொலைக்காட்சி வருகையினால் மூடப்பட்ட முதலாவது திரை யரங்கும் இது தான்.

1936: பொது மக்களின் பொழுது போக்கு சாதனமாக அங்கீகரிக்கப்பட்டு முறையான தொலைக்காட்சி ஒளிபரப்பு லண்டனில் பி.பி.சி நிறுவனத்தால் தொடங்கப்பட்டது. அப்பொழுது பிரிட்டனில் மொத்தம் 100 தொலைக்காட்சிப் பெட்டிகளே இருந்தன.

1950: 1925 இல் இலக்கியத்துக்கான நோபல் பரிசைப் பெற்ற புகழ் பெற்ற நாடக ஆசிரியரும், விமர்சகருமான ஜோர்ஜ் பேர்னாட்ஷா தனது 94 ஆவது வயதில் பிரிட்டனில் காலமானார்.

1956: சோவியத் ஆக்கிரமிப்பை எதிர்த்து ஐக்கியநாடுகள் சபையிடம் ஹங்கேரி அரசு முறையிட்டது.

1963: மொராக்கோ - அல்ஜீரியா எல்லைத்தகராறில் போர் நிறுத்தம் ஏற் பட்டது.

1967: பிரிட்டிஸ் வெளியுறவுச் செயலாளர் ஜோர்ஜ் பிரௌன் "காலணி ஆதிக்கத்தின் முடிவு யுகம் இது" என்று கூறியதுடன் இம்மாத இறுதிக்குள் சவூதி அரேபியாவில் இருந்தும், ஏடானிலிருந்தும் பிரிட்டன் தனது படைகளைத் திரும்பி அழைத்துக்கொள்ள இருப் பதாகவும் தெரிவித்தார்.

1969: இந்தியாவில் காங்கிரஸ் கட்சி இந்திரா காங்கிரஸ் என்றும், ஸ்தாபன காங்கிரஸ் என்றும் இரண்டாகப் பிளவுபட்டது.

1978: உகண்டா தான் சானியா மீது பரடயெடுத்தது. 700 சதுரமைல் வரை கைப்பற்றியது.

1979: விபியாவில் ஆர்ப்பாட்டக்காரர்கள் அமெரிக்கத் தூதரகத்தைக் கொழுத்தி விட்டனர்.

1983: இந்தியாவின் தாராப்பூர் அணுமின் நிலையத்திற்கு உதிரிப்பாகங் கள் வழங்குவதற்கான உடன்படிக்கை ஒன்றில் இந்தியாவும், மேற்கு ஜேர்மனியும் ஒப்பமிட்டன.

1991: நெதர்லாந்தில் நடைபெற்ற சர்வதேச சதுரங்கப் போட்டியில் 12ஆவது இந்திய வீரர் விஸ்வநாதன் ஆனந்தும், அமெரிக்க வீரர் கட் டாகாம் ஸ்க்கியும் அமெரிக்க வீரரும் உலக சதுரங்கச் சம்பியனுமான காரிகாஸ்ரோவையும், முன்னாள் உலக சம்பியன் அனட்டோலி கார்போவையும் வென்றனர்.

1999: பிலிப்பைன்ஸ் நாட்டில் வீசிய "சுவர் தையூன் அஞ்சலா" எனப்படும் சூறாவளிக்காற்று மணிக்கு 250 கி.மீ வேகத்தில் வீசியது. ஆயிரக் கணக்கானவர்கள் உயிரிழந்தனர்.

தொகுப்பு : – சந்துரு

8 ஆம் வாய்க்கால் பகுதியில் புதிதாக அணைகட்டு அமைப்பு

கிளிநொச்சி

கிளிநொச்சி 8 ஆம் வாய்க்கால் பகுதியில் வெள்ளம் தங்காத வாறு அணைக்கட்டு அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுதி மக்கள் வெள்ளத்தால் நீண்ட காலமாக பாதிக்கப்பட்டு வந்தனர். குறிப்பாக - கந்தன் குளத்திலிருந்து வெளியேறும் வெள்ளம் காரணமாக, இந்தப் பகுதியில் வாய்க்கால் இல்லாமையினால் வீதிகள் அனைத்தும் வெள்ளமாக காட்சியளிக்கின்றது.

தற்போது இந்தப் பகுதியில் அணை அமைக்கும் வேலை நடைபெற்று வருகின்றது. இதன் மூலம் ஏற்படும் வாய்க்காலை சிவநகர் குளம் வரை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.சுமார் 4 கிலோ மீற்றர் வாய்க்காலை அமைப்பதன் மூலம் நீரை வெளியேற்ற வழி பிறக்கும்.

கரைச்சிப் பிரதேச செயலரின் முயற்சியில் இவ்வேலைகள் நடைபெற்றுவருகிறது.

இதற்கான நிதியை ஏ.ரீ.ஏ.எவ் நிறுவனம் ஒதுக்கீடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.தொடர் மழைக்கு முன்னர் இந்த வேலைகள் நிறைவேற்றப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப் படுகிறது.

நமது ஈழநாடு

வைர வரிகள்

கேள்வி கேட்பவன் ஐந்து நிமிடங்களுக்குத் தான் முட்டாள். கேள்வியே கேட்காதவன் எப்போதும் முட்டாள். -ஜப்பானியப் பழமொழி -

நமது நோக்கு

கண்காணிப்புக்குழுவின் கருத்தும் அது சொல்லும் செய்தியும்!

"யாழ். குடாநாட்டிலிருந்து இராணுவத்தினரை வெளியேற்றவோ, வெளியேறுமாறு கோரவோ எந்தவிதமான அதிகாரமும் எமக்கில்லை. நாங்கள் வெறுமனே கண்காணிப்பாளர்கள் என்ற பெயரிலேயே இங்கு வந்துள்ளோம். இங்கு நடைபெறுவதைக் கண்காணிப்பது மட்டுமே எமது பணியாகும்."

புக்குளம் கிழக்கில் கடந்த வெள்ளியன்று அப்பாவிப் பொது மக்கள் மீது படைத்தரப்பினரும், பொலிஸாரும் மேற்கொண்ட குப்பாக்கிச் சூடு மற்றும் தாக்குதல் சம்பவம் தொடர்பாக தமது கண்டனத்தைத் தெரிவிக்கும் வகையிலும், நீதி கோரும் வகையிலும் யாழ்ப்பாணத்திலுள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னால் திரண்ட புக்குளம் பகுதிமக்கள் அங்குள்ள அதிகாரியிடம் மகஜர் ஒன்றை கையளித்தபோதே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

அந்த அதிகாரியைப் பொறுத்தவரைக்கும் தங்களுக்கான பணியன் எல்லை எதுவரை உள்ளது என்பதை தமது உணர்ச்சிக் குமுறலையும், அவர்களிடமிருந்து தாங்கள் எதிர்பார்க்கும் பணியையும் வெளிப்படுத்த முயன்ற மக்களிடம் தெரியப்படுத்துவதை விட வேறெதையும் செய்யமுடியாமல் இருக்கலாம்.

ஆனால், இப்போது நடைமுறையிலிருக்கும் போர் நிறுத்த உடன்பாட்டின் விதிமுறைகள் ஒழுங்காகக் கடைப்பிடிக்கப்படுகினறதா என்பதை கண்காணிக்கும் வேலை மட்டும் தான் அவர்களுக்குரியதென்றால், விதிமுறைகள் மீறப்பட்டு படைத்தரப்பினரின் செயற்பாடுகளால், போர் நிறுத்தத்தால் பாதுகாக்கப்படவேண்டிய மக்கள் பாதிக்கப்படும் வேளையில் அதனைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும், மக்களைப் பாதுகாக்கவும் வேண்டிய பொறுப்பை எடுக்கவேண்டியவர்கள் யார் என்ற கேள்விக்கான பதில்தான் என்ன?

அரசும் விடுதலைப்புலிகளும் தான் போர் நிறுத்த உடன்பாட்டில் கையொப்பமிட்டார்களெனினும் அந்த உடன்பாடு ஏற்பட காரணமானவர்கள் சமாதான நடைமுறைகளுக்கான, பேச்சுக்களுக்கான அனுசரணையாளர் பொறுப்பை வகித்து வருபவர்களான நோர்வே அரசினர்தான் என்பது தெரிந்த விடயமே.

அவர்களே போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவையும் உருவாக்கி உடன்பாட்டின் விதிமுறைகள் ஒழுங்காகக் கடைப்பிடிக்கப்படுகின்றதா என்பதைக் கண்காணிக்கும் பணியிலும் அமர்த்தினர்.

இங்கே monitoring mission எனப்படும் கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொள்பவர்களின் பணி போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அதிகாரி தெரிவித்துள்ளதைப்போன்று ஒரு மேற்பார்வையாளர் பணியாக இருப்பின் அதனால் எந்த விதமான அர்த்தமும் இருக்கப்போவதில்லை. போர்நிறுத்தக் கணகாணிப்பு நடவடிக்கையென்பது மிகவும் பொறுப்பும், செயற்திறன் மிக்கதுமான பணியாகவே இன்றும் நடைமுறையில் இருக்கும் போர்நிறுத்த உடன் பாட்டில் வரையறை செய்யப்பட்டுள்ளது என்றே கூறவேண்டும்.

இன்றைய சமாதான சூழலுக்கு எந்தவகையான ஊறு நேர்ந்தாலும், அது எவரால் மேற்கொள்ளப்பட்டாலும், அதன் பினவிளைவுகளை கருத்தில் கொண்டு அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு துரிதமாகச் செயற்பட வேண்டிய பொறுப்பு கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுக்கு உண்டு.

அரசின் மீதோ, அரச படை அதிகாரிகளின் மீதோ, அல்லது ஏனைய பொது அமைப்புக்கள் மீதோ தமிழ் மக்கள் நம்பிக்கை கொள்ள முடியாத சூழலில், போர்நிறுத்தத்தை மீறும் ஆயுதப் படையினராலும், குழுக்களாலும் தமக்கு ஏற்படும் அபத்துக்கள், அவலங்கள் அனைத்தையும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அதிகாரிகளிடம் சென்று கூறி நீதிகேட்பது என்பது தவிர்க்க முடியாததொன்றாகும்.

அவர்கள் மக்களின் கோரிக்கைகள் அடங்கிய மகஜரை வாங்கி உயர் அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்கும் நபர்களாக மட்டும் செயற்படுவதில் அர்த்தம் ஏதும் இருக்கப்போவது கிடையாது.

கண்காணிப்புக் குழுவினர் தமது பக்க நியாயத்தை உணர்ந்து, ஏதாவது சொல்வார்கள் அல்லது செய்வார்கள் என எதிர்பார்க்கும் மக்கள், தமக்கு அவர்களால் நியாயம் ஏதும் உடன்கிடைக்கும் என்ற நம்பிக்கையை இழக்க நேரிடுமாயின், அவர்கள் தமக்கான நியாயங்களையும், தீர்வுகளையும் தாமே தேடிக்கொள்ளும் வழிமுறைகளை நாடவேண்டிய நிலையும் ஏற்படலாம்.

இது போரை மீண்டும் உருவாக்கக் கூடிய ஆபத்தையும் ஏற்படுத்திவிடும் என்பதை கூறுவதும் அவசியமாகின்றது.

ஆரம்பத்திலிருந்தே போர் நிறுத்த உடன்பாட்டின் முக்கிய அம்சங்கள் பலவற்றை ஒப்புக்கொண்டபடி நோ்மையாக அமுல் செய்ய அரச தரப்பின் மீது அழுத்தம் தெரிவிக்காத வரலாற்றுத்தவறை நோர்வே அனுசரணையாளர்களும், அவர்களின் சமாதான பணிகளோடு இணைந்தவர்களும் செய்து வந்ததாலேயே நிலைமை இன்றைய மோசமான நிலையை எட்டியுள்ளது.

அரசுடன் இணைந்து செயற்படும் ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக்களையவும், மக்கள் குடியிருப்பு பகுதிகளில் இருந்து படையினரை வீலக்கிக் கொள்ளவும், உடன்பாட்டின் படி அரசை செயற்படவைக்கவும் சம்பந்தப்பட்டோர் தவறியதாலேயே, சமாதான முயற்சிகள் பாரிசவாத முற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதை நோர்வே அரசும், சர்வதேச சமூகமும் புரிந்து கொள்வது அவசியமாகும்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

நாடும் நடப்பும்

நவீன சங்கீதக் கதிரை



'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

எதையும் நிறைவேற்றத் தெரியாதவர்கள் கெடுப்பதில் தான் முன்னிற்பார்கள்!

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க வேண்டுமென்றும், சமாதானத்தைக் கொண்டு வருபவருக்கே தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டுமென்றும் தேர்தலைத் தமிழ் மக்கள் புறக்கணிக்கக் கூடாது என்றும் தேசிய சமாதானப் பேரவையின் ஊடகப் பணிப்பாளர் கலாநிதி றொகான் பெரேரா யாழ்ப்பாணத்துக்குச் சில தினங்களின் முன் வந்திருந்த போது கருத்துத் தெரிவித்தார். ஊடகவியலாளர் பயிற்சிப் பட்டறையொன்றில் அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்திருந்தார்.

இதே சமயம் போர் நிறுத்த உடன்படிக்கையில் பல பிரச்சினைகள் தோன்றியிருப்பதாக பிரதம மந்திரியும், ஜனாதிபதி வேட்பாளருமான மஹிந்த ராஜபக்ஷ கூறியிருக்கிறார். இன்னொரு வைபவத்தில் முன்னாள் பிரதமரும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான ரத்னசிறி விக்கிரமநாயக்க பேசுகையில் - விடுதலைப் புலிகள் எதுவித நிபந்தனையுமில்லாமல் பேச்சுவார்த்தைகளுக்கு வரவேண்டும் என்று கூறியிருக்கிறார். இந்த மூன்றுபேர்களும் மூன்று விதமாகக் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இன்னும் வேறு சிலரின் அபிப்பிராயங்களையும் கேட்டால் எவரும் எந்த முடிவுக்கு வரமுடியாது போய்விடும் என்று சொல்லிக்கொண்டு வந்தார் நண்பர் பரம சிவம்.

இப்பொழுது தேர்தலுக்கு வாக்குக் கேட்டுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளருக்கு ஆதரவாக நடைபெறும் கூட்டங்களில் பேசுபவர்களிலேயே ஒருவருக்கொருவர் முரணாகப் பேசுகிறார்கள். பத்திரிகைகளில் அறிக்கை விடுபவர்களும் முரணாகத்தான் கருத்துத் தெரிவிக்கின்றனர். ரணில் விக்கிரமசிங்கவும், விடுதலைப்பு லிகளும் போர் நிறுத்த உடன்பாட்டுக்கு வழி வகுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து மூன்றரை ஆண்டுகளாகிவிட்டன. இப்பொழுது தேர்தல் சமயத்தில்தான் மஹிந்தவுக்கு இந்த ஒப்பந்தத்தில் பல பிரச்சினைகள் இருப்பது தெரியவந்திருக்கிறது என்று நான் சொன்னேன்.

சமாதானத்தை யார் கொண்டு வருவார்களோ அவர்களுக்கு வாக்களிக்கும்படி ஒருவர் சொல்கிறார். சமாதானத்தைக் கொண்டு வருவதற்காக இடைக்கால ஏற்பாடாகச் செய்தபோர் நிறுத்த உடன்பாட்டில் பல தவறுகளிருப்பதாக இப்போது தான் பிரதமமந்திரியே கண்டுபிடித்திருக்கிறார். இனி இந்தப் போர் நிறுத்த உடன்படிக்கையை மீள் பரிசிலனை செய்ய வேண்டுமென்று மற்றவர்களும் இப்பொழுதே கூறத் தொடங்கியிருக்கிறார்கள். சமாதானம் ஏற்படுவதற்கு முன் போரை நிறுத்தி வைத்த இந்த உடன்பாடு நீடிப்பதற்கு இவர்கள் விரும்பவில்லை. இந்த நிலையில் சமாதானத்தைக் கொண்டு வரக்கூடியவர்களுக்கு தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டுமென்றால் யாருக்கு வாக்களிக்க முடியும்? என்று பரமசிவம் கேட்டார்.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சம்பந்தப் படாதவர்கள் எல்லோருமே இந்த உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் சந்தர்ப்பமும் அவர்களுக்குச் சரியாகக் கிடைக்கவில்லை. இப்பொழுது தேர்தல் சமயத்தில் நல்ல வாய்ப்புக்கிடைத்திருப்பதால் புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறைகள் இருப்பதாகவும், புலிகள் ஆயுதங்களைத் திரட்டிக்குவித்திருப்பதாகவும், புலிகள் கொலை செய்கிறார்களென்றும், அதில் சம்பந்தப் படாதவர்கள் குற்றம் சுமத்துகிறார்கள். இந்தச் சமயத்தில் நிபந்தனையில்லாமல் பேச்சுக்கு வரச்சொல்லி ரத்னசிறி வற்புறுத்துகிறார். இது எப்படிச் சாத்தியமாகும்? என்று கேட்டேன்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்டவர்களும், சமாதானத்துக்கான முயற்சிகளில் சம்பந்தப் படாதவர்களும், தமிழீழத்துக்கென ஆயுதங்கள் ஏந்தியும், எதையும் உருப்படியாகச் செய்வதற்குத் தைரியமும், துணிவும் மன உறுதியும் இல்லாத கையாலாகாதவர்கள் எப்படியும் தமிழீழப் போராட்டம் வெற்றிபெற்று விடுதலை பெறுவதைத் தடுத்துக் குழப்புவதற்கு என்னவெல்லாமோ செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தேர்தல்களினாலோ, போராட்டத்தினாலோ, பேச்சுவார்த்தைகளினாலோ எதையும் நிறைவேற்ற மாட்டார்கள். எதையும் தடுத்து இடையூறு செய்து குழப்புவதில்தான் இவர்கள் வல்லவர்கள் என்று சொன்னபடி நடந்தார் பரமசிவம்.

நாங்கள் எங்கே போவது?

வாசகர் நோக்கு

கடந்த வருடம் ஏற்பட்ட சுனாமி என்ற கடற்கோள் அழிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதற்காக, அரசசார்பற்ற அமைப்புக்கள் பல இலங்கையில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குப் படையெடுத்திருக்கின்றன. யாழ்ப்பாணத்திலும் உதவுவதற்காக இந்த அரசசார்பற்ற அமைப்புக்கள் உதவிக்கு வந்திருக்கின்றன. இவற்றை நாம் வரவேற்கின்றோம். ஆனால் அரச சார்பற்ற அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் இங்கு தங்கிக் கடமை செய்வதற்கு இங்குள்ள வீடுகள் பலவற்றை வாடகைக்கு எடுத்திருக்கிறார்கள். இவர்களுக்கு வீடுகளை வாடகைக்குக் கொடுப்பதற்குப் பலர் தயாராகவுள்ளதாகப் பத்திரிகைகளில் விளம்பரங்களை வெளியிடுகிறார்கள். டொலர்க் கணக்கில் வருமானம் பெறும் வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவன ஊழியர்கள், வாடகைப் பணமாக அள்ளிக் கொடுக்கிறார்கள். உள்நாட்டில் வீடு வசதியில்லாத பலர் வெளிநாட்டவருடன் போட்டி போட்டு வாடகை செலுத்தி வாடகைக்கு வீடுகள் எடுக்க முடியாமல் அவதிப்படுகின்றனர். வீட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு யார் முன்வருவார்கள், தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் இதைக் கவனத்தில் கொள்ளத் தயாரா?

சிவசிறி
யாழ்ப்பாணம்.

அரசியல் கட்டுரை

பரணி

வாக்களிப்புத் தடை தனிநாட்டு அங்கீகாரமென்ன வாக்களிப்புப் புறக்கணிப்பும் தமிழீழ அங்கீகாரமே



அந்தத் தேர்தல் அந்த எல்லைக்குள் வாழும் மக்களுக்கானதல்ல என்றும், அவர்கள் வாக்களிக்காது தடுக்கப்படுவதால் தேர்ந்தெடுக்கப்படும் அரசுத் தலைவர், அந்த எல்லைக்குள் வாழும் மக்களின் அரசுத் தலைவரல்ல என்றும் ஆகின்றது. இதன் மூலம் இந்தப் பகுதிகள் புலிகளின் தனி நாடாகச் சிங்களத்தாலேயே அங்கீகரிக்கப் படுகிறது என்பது தெளிவாகின்றது. ரணில் கையெழுத்திட்ட சமாதான ஒப்பந்தத்தின் மூலம், கௌரவமான சமாதானம் ஏற்பட வில்லை. அரசுத்தலைவராலேயோ, பிரதமராலேயோ, படைகளாலேயோ நாட்டின் ஒரு பகுதிக்குச் செல்ல முடிய வில்லை என்று கூறுபவர்களுக்கு இது பெரிய இடைஞ்சலாக உள்ளது. தேர்தலில் தமிழ் மக்கள் என்ன செய்யப் போகின்றார்கள் என்பதையிட்டு, மண்டையைக் குடைந்து கொண்டிருப்பவர்கள் வேட்பாளர்கள். நிச்சயமாகத் தமக்குத் தமிழ் மக்கள் வாக் களிக்க மாட்டார்கள் என்ற பயத்தின் காரணத்தாலேயே இந்த வழக்குகள் வைக் கத் தூண்டி விட்டனர். இது அவர்களுக்கே தலையிடியாகப் போய்விட்டது.

இலங்கைத் தீவின் வடக்கு - கிழக்கு பகுதிகளில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தக் கூடாது என்ற தடையை விதிக்கக் கோரி இலங்கை உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கலாகியுள்ளன. உயர் நீதி மன்றம் இடைக்காலத் தடைவிதிக்க அவசியமில்லை என்று தீர்ப்பளித்து மேல் விசாரணையை ஒத்திவைத்துள்ளது.நீதி மன்ற வழக்குப் பற்றியோ, தீர்ப்புப் பற்றியோ இங்கே ஆராயப்போவதில்லை. அத்துடன், அது தமிழ் மக்கள் சம்பந்தப் பட்டதுமல்ல. ஆனால், இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டபின்னர் அரசியல் ஆய்வாளர்கள், அரசியலாளர்கள், அரசியல் சட்டவியலாளர்கள் மத்தியில் ஒரு பரபரப்பும், ஒரு புதிய சிந்தனையும் தோற்றம் பெற்றுள்ளதை அவதானிக்க முடிகிறது. இந்தப் பரபரப்பும் சிந்தனையும் சிங்களத்திலேயே தோற்றம் பெற்றுள்ளது. அது அவர்களை ஆழமாக யோசிக்க வைத்து விட்டது. இவ்வாறு புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் தேர்தலுக்குத் தடை விதித்தால், இதன் விளைவு என்னவாகும்? எங்கே கொண்டு சென்று விடும் என்ற சிந்தனை சிங்களத்திலே எழுந்துள்ளது.

இலங்கைத்தீவின் வடக்கு - கிழக்குப் பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் நேர்மையான தேர்தல் நடைபெறுவதாகவும், வடக்கு - கிழக்குப் பகுதிகளில் நேர்மையற்ற தேர்தல் நடைபெறுவதாகவும் கூறியே இந்தத் தடை உத்தரவு கோரப் பட்டது. நேர்மையற்ற தேர்தல்களை நடத்தி 9 வாக்குகள் 10,11 வாக்குகள் பெற்றவர்களைத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று உலகுக்குக் காட்டிய வர்களால் தமிழ்மக்கள் பேரெழுச்சி கொண்டு, தமது சுயநிர்ணயத்துக்காக வாக்களித்ததைச் சீரணிக்க முடியாமல் உள்ளது. அதனாலேயே தமிழர் பகுதிகளில் நேர்மையான தேர்தல் நடைபெறவில்லை என்றும், அதேபோல் நேர்மையான தேர்தல் நடைபெறமாட்டாது என்றும் கூறிவருகின்றனர். ஆனால், இவ்வாறு தடைவிதிப்பது பாரதூரமான எதிர் விளைவுகளைக் கொடுக்கும் என்று பயப்படுகிறார்கள் வேறுசிலர். இவ்வாறு புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலுள்ள மக்களை வாக்களிக்க விடாது தடுப்பதன் மூலம் அந்த மக்களை வேறு ஒரு நாட்டு மக்கள் என்று அங்கீகரிப்பதாக அமையும். அவ்வாறு வாக்களிக்கத் தடை செய்வதன் மூலம், தமிழீழத்தை அரசே ஒப்புக்கொள்வதாக அமையும் என்று வாதிடுகின்றனர் சட்ட அறிஞர்கள், அரசியல் ஆர்வலர்கள்.

சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் தென்தமிழீழத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி மக்களை வாக்களிக்க விடாது தடுத்தது, அந்த மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறிய செயல் என உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பைச் சுட்டிக்காட்டும் வேறுசிலர், அதேபோன்று இந்த முறையும் அந்த மக்களின் ஜனநாயக உரிமைகளை மறுக்கக் கூடாதென்று கூறுகின்றனர்.

இங்கு முதலில் கூறப்பட்ட விடயமே மிகவும் கவனிப்புக்குரியதாகும். புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வாழும் மக்களை வாக்களிக்க விடாமல் தடுப்ப தன் மூலம், அதனைத் தமிழீழமாக, தனி நாடாக அங்கீகரிக்க வழி ஏற்பட்டு விடும் என்பதே மிகவும் முக்கியமான தாகும். இது சாதாரண பயமல்ல. உண்மையிலேயே ஆழமாகச் சிந்தித்ததன் வெளிப்பாடே இந்தக் கூற்றாகும். அவர் களது கூற்றின்படி ஒரு நாட்டின் அரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கத் தேர்தல் நடைபெறப்போகின்றது. அந்தத் தேர் தலில் ஒரு எல்லைக்குள் வாழும் மக்களை வாக்களிக்கவிடாது தடுப்பதன் மூலம், தமிழர்களது உணர்வைக் கண்டுகொள்ள முடியும்.

இது சர்வதேசத்தின் கடமையாகும். உள்ளே இருப்பவர்கள் வாக்குகளை அள்ளிப் போட்டு விட்டு, இதுதான் தமிழ் மக்களின் தீர்ப்பு என்று கூறுவதைச் சர்வ தேசம் நேர்மையுடன் நிராகரிக்கவேண்டும் .

சேமிப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ள கிராமிய அபிவிருத்தி வங்கியின் செயற்பாடுகள்...

சர்வதேச சேமிப்பு நாள் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டு, குறிப்பாக தமிழர் தாயகப் பகுதிகளில் இந்த சேமிப்புத் தொடர்பான, மக்கள் மத்தியிலான ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்த செயற்பாட்டுக்கு முன்னோடியாகச் செயற்பட்ட வங்கி கிராமிய அபிவிருத்தி வங்கி யாகும்.

சேமிப்புத் தொடர்பில் மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், கடந்த 24ஆம் திகதி தொடக்கம் நேற்று வரை சேமிப்பு வாரம் ஒன்றை இந்த வங்கி அமுல் செய்திருந்தது.

இந்த வாரத்தில் இந்த வங்கி மேற்கொண்ட சேவையினூடாக அடிமட்ட கிராம மக்கள் சேமிப்புத் தொடர்பான விழிப்புணர்வை பெற்றதற்கு அப்பால், தமது சேமிப்பு கணக்குகளையும் இந்த வங்கியில் ஆரம்பித்திருப்பது குறிப் பிடத்தக்க விடயம்.

வன்னியில் பிரதான நகரங்களை எட்டிப் பார்க்க முடியாத பல கிராமங்களுக்குத் தனது நடமாடும் சேவையினூடாகச் சென்று, இந்த சேமிப்பு வாரத்தில் இந்தக் கிராமிய அபிவிருத்தி வங்கி மேற்கொண்ட சேவை, தாயக பொருண்மிய மேம்பாட்டில் ஒரு வளர்ச்சி என்றும் குறிப்பிடலாம்.

1993 ஆம் ஆண்டு கிராமிய நிதியம் என்ற பெயரில் ஆரம்பமான இந்த நிதியம் மக்களுக்காக ஆற்றிய சேவையூடாகக் கிராமிய அபிவிருத்தி வங்கி என்ற வளர்ச்சியை எட்டியிருக்கிறது.

குறிப்பாக தமிழர் தாயகப் பகுதிகளின் மாவட்டங்களுக்கு சிறிலங்கா அரசின் பொருளாதாரத் தடை உச்ச நிலையில் இருந்த போது, இந்த வங்கி ஆற்றிய சேவை மிகப்பெரியது.

வங்கிச் சேவைகள் முடங்கிப் போயிருந்த காலப்பகுதியில், மக்கள் வங்கியை நாடி வர முடியாத நிலையில், இந்த வங்கி மக்களை நாடிச் சென்று சேமிப்புப் பழக்கத்தை நடைமுறையில் வைத்துள்ளனர்.

மக்களின் உழைப்பு, மூலதனம், முயற்சி என்ற பொருண்மிய அடித்தளத்துக்கு அமைவாக இந்த வங்கி மேற்கொண்ட சேவையின் விளைவாக இது 10 கிளைகளுடன் இயங்கி வருகிறது.

குறிப்பாக மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்கள் உட்பட வன்னியில் சில அடிமட்டக்கிராமங்களிலும் இந்த வங்கி தனது கிளைகளை அமைத்து, சேவையாற்றியதன் விளைவாக இன்று மக்களின் மனதில் பதிந்த ஒரு வங்கியாகவும் விளங்குகிறது.

பொருண்மிய மேம்பாட்டை அடிப் படையாகக் கொண்டு பல்வேறுபட்ட கடன் வசதிகளை இந்த வங்கி ஏற்படுத்தியதன் காரணமாகப் பல விவசாயிகளும், முதலீட்டாளர்களும் கடந்த 12 ஆண்டு காலப் பகுதியில் குறிப்பிடும் படியாக மேன்மையடைந்திருக்கின்றார்கள்.

கடந்த 9ஆம் மாதம் வரை இந்த வழியில் 60 ஆயிரம் வழமைதார்கள் இணைந்து, 480 மில்லியன் முதலீட்டுடன் இந்த வங்கி இயங்கி வருவதாக இந்த வங்கியின் வளர்ச்சி வரைபு காட்டுகிறது.

முவிவசாய கடன்களை வழங்கி, விவ சாயிகளின் பொருளாதார மேம்பாட்டில் இந்த வங்கி கணிசமான பங்காற்றியிருக் கிறது.

மு இங்கு கடன் அடிப்படையில் விவசாயிகளுக்கு உழவு இயந்திரங்களையும் வழங்கி, விவசாயிகளை மேம்பாடடையச் செய்திருக்கின்றது.

✕ நிறுவனத் தொழிலாளர்களுக்கு சுயதொழில் கடன்களை வழங்கி, சிறுகைத்தொழில் உற்பத்தியாளர்களை ஊக்குவித்திருக்கிறது.

✕ 'தளிர்' என்கின்ற சிறார் சேமிப்புத் திட்டத்தினூடாகப் பாடசாலை சிறுவர்கள் மத்தியிலான சேமிப்பு ஊக்குவிப்பை இந்த வங்கி மேற்கொண்டு வருகிறது.



✕ மின்சார வசதியற்ற கிராமங்களின் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக இலகு கடன் அடிப்படையில் இந்த வங்கி 'சோலர்' வசதிகள் ஏற்படுத்தி யதன் ஊடாக பல மாணவர்கள் மின் ஒளியில் கல்வி கற்கும் வாய்ப்பினை பெற்றிருக் கிறார்கள்.

தற்போது கிளிநொச்சியில் இயங்கி வரும் கிராமிய அபிவிருத்தி வங்கியின் கிளைகள், கணினி மயப்படுத்தப் பட்ட வையாக இயங்கி வருகிறது.

இந்த வங்கி ஒரு சரியான வங்கிக் கட்டமைப்புக்குட்பட்ட பணிப்பாளர் சபையைக் கொண்டு இயங்கி வருவதானது இந்த வங்கியின் தூர நோக்கு சிந்தனையைக் காட்டுவது மட்டுமல்லாது, மக்கள் மத்தியில் நிரந்தர தன்மையையும் கொண்டிருப்பது ஒரு தனிச் சிறப்பு.

இன்னும் பல பின்தங்கிய கிராமங்களிலும் மக்களின் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு கிளைகளை அமைப்பதை இந்த வங்கி தனது இலக்காகக் கொண்டுள்ளது.

எவ்வாறாயினும், கடந்த 12 ஆண்டு காலத்தில் இந்த வங்கியின் சேவை தாயக மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைத்துள்ளமை மறுப்பதற்கில்லை.

அகிதன்--

தென்னாசிய பூகம்பத்தால் 17,000 சிறுவர்கள் உயிரிழப்பு

யுனிசெவ் அமைப்பு தகவல்

வொஷிங்டன்

தென்னாசிய பகுதியில் கடந்த மாதம் எட்டாம் திகதி ஏற்பட்ட பாரிய பூகம்பத்தில் குறைந்தது 17 ஆயிரம் பாடசாலை மாணவர்கள் உயிரிழந்ததாக, ஐ.நாவின் யுனிசெவ் அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளதாவது -

பூகம்பத்தில் உயிருடன் மீட்கப்பட்டவர்கள், காயமடைந்தோ அல்லது தமது நண்பர்கள் மற்றும் ஆசிரியர்களை இழந்தோ உள்ளனர். இந்த உயிர் தப்பிய சிறுவர்களுக்குத் தேவையான சுகாதார வசதிகள் மற்றும் சுத்தமான குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்காவிடின், பூகம்பத்தில் ஏற்பட்ட உயிரிழப்பைவிட பெருமளவு இழப்பை நாம் சந்திக்கவேண்டி வரும்.

பாகிஸ்தான் அரசாங்கத்தின் தகவலின்படி, வடமேற்கு பகுதியில் 6700 பாடசாலைகளும், ஆஷாத் காஷ்மீரில் 1300 பாடசாலைகளும் பூகம்பத்தால் அழிக்கப்பட்டுள்ளன.

சுனாமியால் உயிர்தப்பிய சிறுவர்களைவிட, பூகம்பத்தால் உயிர்தப்பிய சிறுவர்களின் மனநிலை, மற்றும் உடல்நிலை மிகப்பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

ஏறத்தாழ 20 ஆயிரம் சிறுவர்கள் உடல் ரீதியாகவும், காயங்களினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். சர்வதேச சமூகம், பெருமளவு உதவிகளை வழங்கவேண்டும். பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 550 மில்லியன் டொலரை வழங்குமாறு கோரியிருந்தும், 327 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்கவே இதுவரை சர்வதேச நாடுகள் உறுதியளித்துள்ளன என யுனிசெவ் தெரிவித்துள்ளது.

இதேவேளை இந்த மாத முடிவிற்குள் ஐந்து இலட்சம் தற்காலிக கூடாரங்கள் அமைக்கப்பட்டுவிடுமென பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் நேற்று முன்தினம் உறுதியளித்துள்ளார்.

பூகம்பத்தால் பாதிக் கப்பட்ட எட்டு இலட்சம் மக்கள் இதுவரை இருப்பிட வசதிகளற்று இருப்பதாக உதவி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. ஆனால் அவர்களின் இந்தக் கூற்றை முஷாரப் மறுத்துள்ளதுடன், இந்த உதவி நிறுவனங்கள் தெரிவித்த கருத்தை சவாலாக ஏற்று, அவர்கள் கூறியது பிழையென்பதனை நிரூபிப் போமெனவும் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் மற்றும் இந்திய நிர்வாகத்திற்குட்பட்ட காஷ்மீர் எல்லைப் பகுதியில் இரண்டு தங்குமிடங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

இந்தியா தனது பகுதியில் மூன்று தங்குமிடங்களை அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கரிபியன் கடற்பகுதியில்

2 தொன் ஹொக்கெய்ன் போதைப்பொருள் மீட்பு!

மேற்கு கரிபியன் கடற்பகுதியில் 200 மில்லியன் பவுண்ட்ஸ் (2 தொன்) பெறுமதியான ஹொக்கெய்ன் போதைப் பொருளை பிரிட்டன் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

நிக்கரகுவாவிலிருந்து நூறு கடல்மைல் தொலைவில் அதிவேக படகொன்று செல்வதைக் கண்ட பிரிட்டன் எச்.எம்.எஸ் ஹம்பலான்ட் (HMS Cumberland) என்ற போர்க்கப்பல், அதனை வழிமறித்து பிடித்த வேளை போதைப்பொருள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தப் போதைப்பொருள் கடத்திய குழுவினரைப் பிடிக்க ஹெலிகொப்டரின் உதவியும் நாடப்பட்டு, அதன் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டு படகு நிறுத்தப்பட்டதாகவும், இந்தப் படகிலிருந்து நால்வர் கைது செய்யப்பட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது ஒரு வெற்றிகரமான நடவடிக்கையென, பிரிட்டனின் பாதுகாப்பு செயலர் ஜோன் றீட் தெரிவித்தார்.

ஈராக் தாக்குதலில் 21 பேர் உயிரிழப்பு!

பக்தாத்

ஈராக்கின் பக்தாத் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற கார் குண்டுத் தாக்குதலில் 21 பேர் உயிரிழந்தனர்.

புனித ரமழான் மாதக் கொண்டாட்டத்திற்கு மக்கள் தயாராகி வந்த வேளை விடுதி ஒன்றிற்கு அருகில் மேற்படி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் தாக்குதலில் 21 பேர் கொல்லப்பட்டதாகவும் 41 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஈராக்கில் வேறு இரு குண்டுத் தாக்குதலில் 7 அமெரிக்க படையினர் கொல்லப்பட்டனர்.

ஜனாதிபதித் தேர்தலை தமிழ்மக்கள் புறக்கணிப்பது சரியானதொரு முடிவே

தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரண்டு பிரதான வேட்பாளர்களும் தமிழர்களையும், அவர்களது போராட்ட பலத்தையும் ஒடுக்க வேண்டுமென்பதில் ஒரே கொள்கையைக் கொண்டுள்ளனர். தமது பிரச்சினைகளில் வேறுபட்டு நிற்கின்ற இருவரது கட்சிகளும், தமிழருக்கெதிரான அவசரகால சட்டத்தை அமுல் படுத்துவதில் ஒன்றாகச் செயற்படுவது நல்லதோர் எடுத்துக் காட்டென எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிப்பது சரியான முடிவா எனத் தெரிவித்து தென்மராட்சி பொது அமைப்புகளின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக தமிழ் மக்களின் மனதில் இயல்பாகவே எழும் சில வினாக்களுக்கான தெளிவான விடைகளிலேயே அத்தேர்தல் தொடர்பான அவர்களின் அணுகுமுறை அமைய வேண்டும்.

இந்தத் தேர்தலில் தமிழ்மக்கள் வாக்களிக்க வேண்டுமா? வாக்களிப்பதனால் அவர்களுக்கு நன்மை உண்டா? வாக்களிப்பைப் புறக்கணிப்பதனால் நன்மை உண்டா? வாக்களிப்பதானால் யாருக்கு வாக்களிப்பது? பிரதான இருவரில் யாராவது புரையோடிப்போன இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வுகாணும் எண்ணத்தை உண்மையில் கொண்டிருக்கிறார்களா?

இந்தத் தேர்தலில் பிரதான வேட்பாளர்களாகக் கருதப்படுபவர்கள் தற்போதைய பிரதம மந்திரி மகிந்த ராஜபக்ஷவும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் ஆவர். தமிழ் மக்கள் தொடர்பாக இவ்விரு வேட்பாளர்களின் கடந்தகாலச் செயற்பாடுகள், தற்கால நிலைப்பாடுகள் என்பவற்றின் அடிப்படையில் இவர்களின் எதிர்கால நடவடிக்கைகள் எவ்வாறு அமையுமென நாம் மதிப்பீடு செய்து கொள்ளமுடியும்.

மகிந்த ராஜபக்ஷ வெளிப்படையாகவே இனவாதத்தைக் கக்கி வருவதுடன், தான் சிங்கள பௌத்த மக்களின் காவலன் என்றும் கூறிவருகிறார். அத்துடன் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்குவதற்கான மறைமுக நிகழ்ச்சிநிரல் ஒன்றையும் கொண்டிருக்கிறார். தீவிர இனவாதக் கட்சிகளான ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய என்பவற்றுடன் இறுக்கமான ஒரு கூட்டை அவர் ஏற்படுத்தியிருப்பதுடன், முழுக்க முழுக்க தமிழ் மக்களுக்கு எதிரான நிபந்தனைகளுக்கு இணங்கி உடன்படிக்கையும் செய்துள்ளதுடன், தனது தேர்தல் விஞ்ஞாபனமான மகிந்தவின் சிந்தனையிலும் அதை வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழ்மக்களுக்குத் தாயகம் என்று ஒன்றில்லை; சுயநிர்ணய உரிமை கிடையாது; யுத்தநிறுத்த உடன்படிக்கை மீளாய்வு செய்யப்படவேண்டும்; சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அனுசரணையாளராகச் செயற்படும் நோர்வேயை புறந்தள்ளவேண்டும். ஒற்றையாட்சிக்குள்ளேயே எந்தவொரு தீர்வும் காணப்பட வேண்டும்; என்பன ராஜபக்ஷவின் எதிர்கால நடவடிக்கைகள் எவ்வாறு அமையும் என்பதை கட்டியம் கூறி நிற்கின்றன.

அது மட்டுமன்றி இவரும் இவரது கட்சியினரும் சமாதானத்திற்கான யுத்தத்தை முன்னெடுத்து தமிழர் தாயகத்தைச் சிதைத்தவர்கள். பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் உயிர்களைப் பறித்தவர்கள். ஆயிரமாயிரம் மக்களை அவர்களின் வாழ்விடங்களிலிருந்து விரட்டி இன்றும் அகதிகளாக அலைய வைத்தவர்கள். தமிழர் தாயகப் பிரதேசங்களில் ஆக்கிரமிப்புச் சின்னங்களாக பன்சல்களையும், புத்தர் சிலைகளையும் நிறுவி வருபவர்கள். யுத்தநிறுத்த உடன்படிக்கை, சமாதானப் பேச்சுவார்த்தை என்பவற்றை கடுமையாக விமர்சிப்பதுடன் அதனை அடிப்படையாகக் கொண்டு ரணிலின் ஆட்சியைப் பறித்தவர்கள். சமாதானப் பேச்சு வார்த்தையை முடக்கியவர்கள். இதிலிருந்து மகிந்த ராஜபக்ஷ எப்படியானவர், அவர் ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய என்பனவற்றுடன் இணைந்து எதிர்காலத்தில் எவ்வாறு செயற்படுவார் என்பது மேற்கூறிய விடயங்கள் எமக்குத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மகிந்த ராஜபக்ஷவைப்போல வெளிப்படையாக இனவாதம் பேசாவிட்டாலும் தமிழ் மக்களுக்குச் சார்பானவர்போல அவர் சில வார்த்தைகளை கூறிவந்தாலும், ராஜபக்ஷவைவிட மிகமோசமான தமிழர் விரோதக் கொள்கைகளையும், மறைமுகவேலைத்திட்டங்களையும் முன்னெடுத்து வரும் ஒருவர், இப்போது அடக்கி வாசித்தாலும் மிகத் தீவிரவாத இனவெறிகொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்.

1983 இல் திட்டமிட்டு தமிழர்கள் மீது இனக்கலவரத்தை நடத்தியதுடன், தமிழர்களை அழிப்பதற்கான கொடூரமான யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்ட ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆட்சியில் முக்கிய அமைச்சராக இருந்து தமிழ்மக்கள் மீதான சகல அராஜக நடவடிக்கைகளுக்கும் துணைபோன கனவான். சந்திரிகா அரசினால் 2001 ஆம்ஆண்டு இனப்பிரச்சினையைத் தீர்க்க முன்வைக்கப்பட்ட அரைகுறைத் தீர்வுத் திட்டத்தைக்கூட நாடாளுமன்றில் தனது கட்சி உறுப்பினர்களைக் கொண்டு எரிப்பித்து குழப்பிய உத்தமன்.

யுத்தநிறுத்தம் செய்து தனது சிங்கள இனத்தையும், நாட்டின் பொருளாதாரத்தையும் காப்பாற்ற முனைந்தாரேயொழிய, பேச்சுவார்த்தையினூடான இனப்பிரச்சினை தொடர்பாக எந்தவொரு முன்னேற்றத்தையும் ஏற்படுத்தாது, காலத்தை இழுத்தடித்து சர்வதேச வலைப்பின்னல் ஒன்றினூடாக தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை ஒடுக்க முனைந்தவர். இந்தியாவுடனும், அமெரிக்காவுடனும் பாதுகாப்பு உடன்படிக்கைகள் செய்யப் பகீரதப் பிரயத்தனம் செய்தவர்.

இன்றும்கூட இனப்பிரச்சினைக்கான தனது தீர்வுத்திட்டத்தை தெளிவாக முன்வைக்காது ஒஸ்லோ பிரகடனம் என்றும், அதிகாரப் பரவலாக்கல் என்றும் பூசிமெழுகி வரும் அதே வேளை, இராணுவத்தை நவீனமயப் படுத்துதல், சிறிலங்காவின் இறைமையைப் பாதுகாத்தல் என்பனவற்றில் உறுதியான கருத்தை வெளிப்படுத்தி வருபவர். தமிழ் மக்களை ஒடுக்குவதற்கான அவசரகாலச் சட்டத்திற்கு ஒத்துழைத்து வருபவர், ரணில் விக்கிரமசிங்கவும் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாக எவ்வாறு செயற்படுவார் என்பதற்கு மேற்காட்டிய அவரது நடவடிக்கைகள் தக்க சான்று பகர்கின்றன.

உண்மையில் ராஜபக்ஷ, ரணில் இருவருமே பௌத்த சிங்கள மேலாதிக்கத்தின் காவலர்கள். யார் சிறந்த காவலர் என்பதிலேயே போட்டி போடுகிறார்கள். இவர்கள் இருவரும் அரசியல் அதிகாரத்தைப் பிடிப்பதற்காக தமிழ் மக்களின் பிரச்சினையை பிரசார உபாயமாக வேறுபட்ட வகையில் பயன்படுத்துகிறார்களேயொழிய, பிரச்சினையைத் தீர்ப்பதற்கான விருப்பமோ அல்லது தெளிவான, உறுதியான, ஒத்திசைவான எந்தவொரு கொள்கையோ, திட்டமோ இருவரிடமும் கிடையாது.

எனவே இந்தத் தேர்தலானது சிறிலங்காவுக்கும், சிங்கள மக்களுக்குமான ஒரு அதிகாரமிக்க தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான ஒரு தேர்தலாகும். இத்தேர்தலில் வாக்களிப்பதன் மூலம் தமிழ் மக்கள் எந்தப் பயனையும் அடையப்போவதில்லை. ஆனால், இந்தத் தேர்தலைத் தமிழ் மக்கள் புறக்கணிப்பதன் மூலம் பல நன்மைகளைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. தமிழ் மக்களின் அபிலாசைகளை எந்தவொரு சிங்களத் தலைவரும் நிறைவேற்றமாட்டார்கள் என்பதையும், எவர்மீதும் தமிழ் மக்கள் நம்பிக்கைக்கையைக் கொண்டிருக்கவில்லை என்பதையும். இதன் மூலம் சர்வதேசத்துக்கு எடுத்துக்கூறமுடியும்.

தேசியம், தாயகம், தன்னாட்சி என்பவற்றின் அடிப்டையில் சர்வதேசத்தின் அங்கீகாரத்தைக் கோரி மக்கள் எழுச்சிப் பேரணிகளை முன்னெடுக்கும் இன்றைய நிலையில் தமிழ் மக்களின் தேர்தல் புறக்கணிப்பானது அக்கோரிக்கைக்கு மேலும் வலுச் சேர்ப்பதாகவே அமையும். எனவே தமிழ் மக்கள் அனைவரும் இந்தத் தேர்தலைப் புறக்கணித்து இனத்தின் விடுதலைக்கு பலம் சேர்ப்பதே சரியான முடிவாகும் என அந்த அறிக்கையில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'எங்களால் முடியும்' நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம்

பெண்களுக்கு எதிரான சகல விதமான வன்முறைகளையும் இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கை 'எங்களால் முடியும்' என்ற தலைப்பில் மாவட்ட செயற்பாட்டுக் குழு ஒக்ஸ்பாமுடன் இணைந்து நடத்தும் மாற்றங்களை ஏற்படுத்துவோருக்கான நிகழ்வும் இசை நிகழ்ச்சியும் நாளை நடைபெறவுள்ளது.

